பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 மார்கழி 03 வியாழக்கிழமை 19.12.2019 கதிர் 44

**இது ரகசியம் அல்ல!**

அரசியல்வாதிகள் பெரும் பாலும் சொல் ஒன்றும், செயல் ஒன்றுமாக இருப்பார்கள். அவர வர் களுக்கு என்று விடயங்கள் வரும் போதுதான் உண்மை வெளிப் படும். அவர்கள் உரைத் துப் பார்க்கப்படுவார்கள்.

அப்படி என்னு பக்கம் 02

# முழு ஆணையையும் தமிழர்கள் கூட்டமைப்புக்கே தரவேண்டும்!

## யாழ்ப்பாணத்தில் இடித்துரைத்தார் சம்பந்தன்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெம்பர்19

எதிர்காலத்தில் சர்வதேசரீதியாக மற்றும் உள்நாட்டில் நிறைவேற்றவேண்டிய நடவடிக்கைகளை நாம் முன்னெடுக்க வேண்டும் என்றால் தமிழ் மக்கள் தமது ஆணையை முழுமையாக எங்களுக்கு வழங்கவேண்டும்.

- இவ்வாறு நேற்றுப் பகிரங்க அறிவிப்பை விடுத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன். பக்கம் 04

## இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 70 ஆவது ஆண்டு நிறைவு விழா





யாழ்ப்பாணம், டிசெ.19

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 70 ஆவது ஆண்டு நிறைவு விழா, கட்சியின் தலைவர் மாவை பக்கம் 03


## அரிசி விற்பனை நிலையத்துக்கு அதிரடி விசிட் செய்தார் கோட்டா



கொழும்பு,டிசெ.19

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேதுத் திடீரென நாராஹேன்பிட்டியிலுள்ள பக்கம் 02

## இலங்கை ஒரு பௌத்த நாடே அல்ல மீண்டும் அடித்துக் கூறுகின்றார் விக்கி



கொழும்பு, டிசெ.19

இலங்கை ஒரு பௌத்த நாடு அல்லவெனத் தான் தெரிவித்த கருத்து, வரலாற்று மூலாதாரங்கள் மற்றும் வரலாற்றாசிரியர்களின் கருத்துக்கள் என் பக்கம் 03

## கம்பரெலிய மோசடிகளை விசாரிக்க ஆணைக்குழு

### அங்கஜன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.19

கடந்த ஆட்சிக் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட கம்பரெலியத் திட்டத்தில் ஊழல்கள் பக்கம் 03

## சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் எமது கொள்கை நியாயமானதென்பதை நிரூபித்திருக்கின்றது தமிழரசு

### 70ஆவது ஆண்டு விழாவில் சுமந்திரன் எம்.பி. பெருமிதம்



யாழ்ப்பாணம்,டிசெ.19

சூழ்நிலைகள் சாதகமாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் சர்வதேசச் சட்டத்தின் கீழ் எமக்கு இருக்கின்ற உரித்தை இலங்கையின் நீதிமன்றங்களில் கூட தொடர்ச்சியாக வாதிட்டதன் மூலம் எமது கொள்கை நிலைப்பாடு சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் பக்கம் 03

## சம்பிக்க ரணவக்க கைது!



கொழும்பு, டிசெ. 19

முன்னாள்அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சம்பிக்க ரணவக்க பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். பக்கம் 02

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்.மாநகர சபை உறுப்பினர் கைது!

### மணல் கொள்ளைக்குக் காணியை வழங்கினார் என்று



யாழ்ப்பாணம்,டிசெ.19

அரியாலைப் பகுதியில் உள்ள தனது காணியைச் சட்டவிரோதமான மணல் அகழ்வு நடவடிக்கைக்கு வழங்கினார் என்ற குற்றச் சாட்டில் பக்கம் 02

## காற்றாலைத் திட்டத்தை எதிர்த்து மறவன்புலவு மக்கள் போராட்டம்



யாழ்ப்பாணம், டிசெ. 19

தென்மராட்சி, மறவன் புலவு மக்கள் குடியிருப்புக்கு அண்மையாக காற்றாலை மின் உற்பத்தி நிலையம் பக்கம் 02

## டிங்கிப் படகுடன் மன்னாரில் ஈரானியர் உட்பட மூவர் கைது



மன்னார், டிசெ.19

மன்னார் – சிலாவத்துறை கடற் பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் டிங்கிப் படகொன்றில் பயணித்த ஈரானியர் ஒருவர் பக்கம் 02

## மணல் கொள்ளையை எதிர்த்து யாழ்ப்பாணத்தில் போராட்டம்

### வழி அனுமதியை அவசியமாக்க வலியுறுத்து



யாழ்ப்பாணம்,டிசெ.19

தமிழர் தாயகத்தில் நடக்கும் சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கையைக் கண்டித்தும் அதனை உடன் தடுத்து நிறுத்துமாறு வலியுறுத் பக்கம் 02

## கோட்டாபய கொலை முயற்சி வழக்கில் 14 ஆண்டுகளின் பின் ஒருவர் விடுதலை!



கொழும்பு, டிசெ.19

பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவைக் கொலை செய்ய முயற்சித்தார் என்ற சந்தேகத்தின் பேரில் கடந்த பக்கம் 02

## தமிழ்த் தேசிய..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் கிருபாகரன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

எனினும் அங்கு மணல் அகழ்வில் ஈடுபட்டோர் வாகனங்களைக் கைவிட்டுத் தப்பிவிட்டனர் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வு இடம்பெறுவதாகப் பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. சம்பவ இடத்துக்குப் பொலிஸார் சென்றபோது, அங்கு மணல் அகழ்வில் ஈடுபட்டோர் தப்பி ஓடிவிட்டனர்.

அதனால் காணி உரிமையாளர் எனத் தெரிவிக்கப்பட்ட யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் விசுவலிங்கம் கிருபாகரன் கைது செய்யப்பட்டார்.

சம்பவ இடத்தில் ஜே.சி.பி. வாகனம் மீட்கப்பட்டு பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துவரப்பட்டது. புதையுண்ட நிலையிலும் சில்லுகள் காற்றுப்போன நிலையிலும் உள்ள உழவு இயந்திரம் அந்தப் பகுதியில் உள்ளது. அத்துடன், சம்பவ இடத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள உழவு இயந்திரமும் மாநகர சபை உறுப்பினருடையது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் தப்பிச் சென்ற ஏனையவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, அரியாலை பூம்புகாரில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட ஐவரின் கைதுக்குக் காரணமாகவிருந்த யாழ்ப்பாணம் மாநகர சபையின் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் வி.கிருபாகரன், தனது காணியை சட்டவிரோத மணல் அகழ்வுக்கு வழங்கியமை ஆச்சரியமாக உள்ளது என்று யாழ்ப்பாணம் பொலிஸார் குறிப்பிட்டனர். (ஐ-07)

## அரிசி விற்பனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசேட பொருளாதார மத்திய நிலையத்துக்குக் கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டார்.

அங்குள்ள சகல அரிசி விற்பனைநிலையங்களுக்கும் சென்று அரிசிவிலை குறித்து அவர் ஆய்வு செய்தார். இதன்போது, அரசு விதித்துள்ள கட்டுப்பாட்டு விலையை விடவும் அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்வது தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, அரசு அறிமுகம் செய்துள்ள கட்டுப்பாட்டு விலைக்கு அரிசியை விற்பனை செய்யுமாறு சம்பந்தப்பட்ட தரப்புக்கு ஜனாதிபதி உடன் உத்தரவு பிறப்பித்தார் என்வும் கூறப்படுகின்றது.

## காற்றலைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதி மக்கள் சாவகச்சேரிப் பிரதேச சபைக்கு முன்னால் நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மறவன்புலவுப் பகுதியில் தனியார் நிறுவனம் ஒன்றினால் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் அமைப்பதற்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் அப்பகுதி மக்கள், தமது குடியிருப்புக்களை அண்டிய பகுதிகளில் காற்றாலைகள் அமைக்கவேண்டாம் என்று கூறி அப்பகுதியில் காற்றாலை அமைக்கும் பணிகளில் ஈடுபட்டு வருபவர்களுக்கு எதிர்ப்பு தெரிவித்தமையோடு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களினால் மனு ஒன்றும் பிரதேச சபைத் தவிசாளரிடம் கையளிக்கப்பட்டது.

இது தொடர்பில் நீதிமன்றத்தை நாடி அதன் கட்டளைப்படி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனப் பிரதேச சபையின் தவிசாளர், ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எழுத்துமூல உறுதிமொழி வழங்கினார். (ஐ-07)

## சம்பிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2016ஆம் ஆண்டு இடம்பெற்ற வாகனவிபத்துச் சம்பவத்தில் முன்னாள் அமைச்சர் பாட்லி சம்பிக்க ரணவக்க மற்றும் அவரது சாரதி ஆகியோர் தொடர்புபட்டனர் எனக் கூறப்படுவது சம்பந்தமான விசாரணையின் முன்னேற்றத்தை மன்றுக்கு அறிவிக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் கொழும்பு குற்றத்தடுப்புப் பொலிஸாருக்கு உத்தரவிட்டது.

முன்னாள் அமைச்சர் பாட்லி சம்பிக்க ரணவக்கவின் சட்டத்தரணிகள் தாக்கல் செய்த மனுவின் மீதே இந்த உத்தரவு நேற்று முன்தினம் பிறப்பிக்கப்பட்டது.

இந்த நிலையில் சட்டமா அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைய, நாடாளுமன்ற உறுப்பினர் பாட்லி சம்பிக்க ரணவக்க, கொழும்பு குற்றத்தடுப்புப் பொலிஸாரால் நேற்று மாலை கைது செய்யப்பட்டார். அவரை இன்று காலை வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார். (ஐ)

## கோட்டாபய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

13 வருடங்களாகத் தடுப்புக் காவலில் இருந்த – புங்குடுதீவைச் சேர்ந்த – சந்திரபோஸ் செல்வச்சந்திரனை கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று விடுதலை செய்து தீர்ப்பளித்தது.

அவரின் சார்பில் நீதிமன்றில் முன்னிலையாகி வாதாடிய ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராஜாவின் வாதத்தை அடுத்தே வழக்கின் நான்காம் எதிரியான சந்திரபோஸ் செல்வரச்சந்திரன் விடுவிக்கப்பட்டார்.

2006ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதலாம் திகதி கொழும்பு கொள்ளுப்பிட்டி பித்தளைச் சந்தியில் கோட்டாபய ராஜபக்ஷவின் வாகன அணி மீது தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இத்தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பொதுமக்கள், இராணுவத்தினர் மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் காயமடைந்தனர். அரச சொத்துக்களுக்கும் பெரும் சேதம் ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கொலை, கொலை முயற்சி, அவற்றுக்கான சதித் திட்டம் தீட்டியமை, அரச சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தியமை உட்பட பல்வேறு குற்றச்சாட்டுகள் ஐந்து தமிழ்க் கைதிகளுக்கு எதிராகக் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் 2013 டிசெம்பர் 4ஆம் திகதி சட்டமா அதிபரினால் சுமத்தப்பட்டன.

தடுப்புக் காவலில் முதலாம், இரண்டாம், ஐந்தாம் எதிரிகளின் குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களை பதிவு செய்தவர்கள் என்று கூறப்படும் பொலிஸ் அத்தியட்சகர்கள் நீதிமன்ற விசாரணைக்கு சமுகமளிக்காத நிலையில் நான்காம் எதிரியான சந்திரபோஸ் செல்வச்சந்திரனுக்கு எதிரான வழக்கு விசாரணை நடைபெற்றது.

அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கே.வி.தவராசா, புற்றுநோய்ச்சிகிச்சைக்காகக் கொழும்புக்கு வந்த தனது கட்சிக்காரரைப் பயங்கரவாதப் புலனாய்வுப் பொலிஸார் கைது செய்து, தடுப்புக் காவலில் வைத்து சித்திரவதை செய்து, குற்ற ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றைத் தயாரித்து வல்வந்தமாக அதில் ஒப்பத்தைப் பெற்றுள்ளனர் என்று வாதிட்டார்.

எதிரியின் சார்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சட்டவைத்திய அதிகாரி உருத்திரமூர்த்தி மயூரதன், தடுப்புக்காவலில் எதிரி சித்திரவதை செய்யப்பட்டமையால் அவரது உடலில் பன்னிரண்டு கடுங்காயங்கள் ஏற்பட்டுள்ளமையை உறுதி செய்துள்ளார் என்பதை சட்டத்தரணி தவராஜா தமது வாதத்தில் நிரூபித்தார்.

அதனடிப்படையில் அந்த வாக்குமூலத்தை எதிரிக்கு எதிரான ஒன்றாக முன்வைப்பதை ஏற்க முடியாது என உத்தரவிட்ட நீதிமன்றம் அந்த வாக்குமூலத்தையும் நிராகரித்தது.

அதன் பின்னர் நான்கு மாதங்கள் கடந்தும் இவ்வழக்கில் எதிரிக்கு எதிராக வேறு எந்தச் சாட்சியங்களோ, ஆதாரங்களோ, சான்றுகளோ சமர்ப்பிக்கப்படாத நிலையில் அவரைத் தொடர்ந்து தடுத்து வைத்திருப்பது சட்டத்தவறு என சட்டத்தரணி தவராஜா நேற்று வாதிட்டார்.

அதனை ஏற்றுக்கொண்டு எதிரியை உடனடியாக விடுதலை செய்து கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த வழக்கில் சட்டமா அதிபர் சார்பில் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் ரோகாந்த அபேசூரியவும், நான்காம் எதிரி சார்பில் செல்வி தர்மஜா தர்மராஜாவின் அனுசரணையுடன் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராஜாவும் ஆஜரானார்கள். (உ)

## டிங்கிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளிட்ட மூவர் நேற்று முன்தினம் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வழமையான ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர், மேற்படி கடற்பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் பயணித்த டிங்கிப் படகொன்றை சோதனையிட்டனர். இதன்போது, அந்தப் படகில் ஈரானியர் ஒருவரும் இலங்கையர் ஒருவரும் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது உரிய அனுமதி இல்லாமல் பயணித்துள்ளமை தெரியவந்துள்ளது.

டிங்கி படகுடன் சந்தேகநபர்கள் இருவரையும் கைது செய்த கடற்படையினர் மேலதிக விசாரணையின்போது, சுற்றுலாப் பயணி வழிகாட்டியென தெரிவிக்கும் நபரொருவரை சிலாவத்துறை கடற்கரையில் வைத்துக் கைது செய்துள்ளனர். குறித்த நபரிடம் உரிய ஆவணங்கள் காணப்படாமை காரணமாக அவரைக் கைது செய்துள்ளனர் எனவும் கடற்படையினர் தெரிவித்தனர்

27, 31, 57 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். கைதான இலங்கையர்கள் இருவரும் நீர்கொழும்பைச் சேர்ந்தவர்கள் எனவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

டிங்கிப் படகுடன் கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்கள் மூவரும் மேலதிக நடவடிக்கைகளுக்காக சிலாவத்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் எனக் கடற்படையினர் தெரிவித்தனர்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டைய கவனிப் புக்கு உள்ளான ஒரு விடயம் குறித்து இன்று கருத்துப் பகிர விரும்புகிறேன்.

மணல் கொள்ளைக்கு எதிராக நேற்று பொது ஆர்ப்பாட்டம் ஒன்று யாழ்.நகரில் நடத்தப்பட்டது. இரண்டு நாளைக்கு முன்னர் தான் அப்படி ஒரு போராட்டம் நடத்தப்படுவது பற்றிய தகவல் ஊடகங்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டது. யாரும் ஊடகங்களுக்குப் பின்னால் வந்து நின்று நெட்டித்தள்ளி செய்தி பிரசுரிக்கும்படி அழுத்தம் கொடுக்கவில்லை. ஊடகங்கள் இயல்பாகவே அந்தச் செய்தியைப் பிரசுரித்தன. யாரும் போராட்டத்துக்கு எவரையும் ஏற்றி இறக்கவில்லை.

போராட்டத்தை ஏற்பாடு செய்தவர்கள் ஒரேயொரு தவறு செய்துவிட்டார்கள் என்று நேற்று முன்தினம் நான் எனக்குள் கணக்கிட்டுக் கொண்டேன்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் எழுபதாவது ஆண்டு நிறைவை ஒட்டிய பொதுக் கூட்டம் நேற்றுக் காலை 9.30 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் கலா மண்டபத்தில். அது, எப்போதே தீர்மானிக்கப்பட்டு ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு. அத்துடன் நேற்றைய தினம்தான் தமிழரசுக் கட்சி தொடங்கிய நாளும் கூட.

அந்தச் சமயத்தில் இந்தப் போராட்டமும் ஒழுங்கு செய்யப்பட்டமையால் தமிழரசுக் கட்சிப் பிரமுகர்கள் இந்தப் போராட்டத்துக்கு வரமுடியவில்லை. அது விளங்கிக் கொள்ளத்தக்கதே. எனினும் கூட தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன் போராட்டத்தில் பங்குபற்றினார்.

அதுமட்டுமல்ல, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, புதிதாகத் தொடங்கப்பட்ட தமிழ்த் தேசியக் கட்சி, புளொட், ரெலோ, தமிழ் மக்கள் கூட்டணி என்று எல்லாக் கட்சியினரும் நேற்றைய போராட்டத்துக்கு வந்திருந்தனர். ஐங்கரநேசனின் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் பிரதிநிதிகளும் நின்றிருந்தனர்.

ஓரளவுக்கு அனைத்துத் தரப்பினரினதும் பங்களிப்புடன் ஒரு பொது கருத்தை – மக்களின் நிலைப்பாட்டை – ஒருங்கிணைப்புடன் வெளிப்படுத்தும் ஆர்ப்பாட்டமாக அது அமைந்தது.

ஆனால், அத்தகைய போராட்டத்தை முன்னெடுத்தமைக்கான உரிமைப் பொறுப்பை - credit ஐ – யாரும் கோரவில்லை.

என்ன, ஏது என்று விசாரித்தேன். நிகழ்வுக்கு ஏற்பாடு செய்ததிலிருந்து, பதாகைகள், பனர்களைத் தயார் செய்தமை வரை சத்தம்சந்தடியின்றி ஒரு தரப்பு முன்னெடுத்தமையை அறிந்து கொண்டேன்.

அது– சூழலியலாளர் ஐங்கரநேசனும் அவரது தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தினரும்தான் அந்த வேலையை தம்மை முன்னிறுத்தாமல் எடுத்திருந்தனர்.

மணல் கொள்ளைக்கு எதிரான போராட்டம் என்றால் அதை முன்னெடுக்க வேண்டிய தரப்பு பசுமை இயக்கம்தான். ஆனால், அந்த இயக்கம் கடைசி வரைத் தன்னை முன்நிறுத்தாமலேயே இந்த விடயத்தை நடத்தி முடித்திருக்கின்றது.

இந்தப் போராட்டத்தில் தன்னை வெளிப்படுத்துவதில் அந்த இயக்கம் முயற்சி எடுக்காமல் போயிருக்கலாம். ஆனால், இது விடயத்தில் ஒட்டுமொத்த வடக்கின் நிலைப்பாடு இதுதான் என்பதை கட்சி வேறுபாடுகள், அணி – குழு நிலை முரண்பாடுகள் இன்றி, வெளிப்படுத்துவதில் அந்த இயக்கமும் அதன் தலைவர் ஐங்கரநேசனும் வெற்றி பெற்றிருக்கின்றார்கள் என்பது உறுதி.

இனி விடயத்துக்கு வருகிறேன்.

முன்னாள் முதலமைச்சர் நீதியசரசர் சி.வீ.விக்னேஸ்வரனின் தலைமையில் தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் சில மாதங்களுக்கு முன்னர் 'எழுக தமிழ்' நிகழ்வு நடந்து முடிந்தது.

அதன் முடிவு எத்தகையது என்பதன் மதிப்பீட்டை வாசகர்களின் முடிவுக்கே விட்டுவிடுகிறேன்.

ஆனால், அந்த 'எழுக தமிழ்' நிகழ்வு பெருவெற்றியாக அமைய வேண்டுமானால் கட்சி சாராமல், சுயாதீனமாகத் தமிழ் மக்கள் பேரவை போன்ற அமைப்புக்கள் அதனை நடத்த இடம் விட்டு, ஓர் அரசியல் கட்சியின் செயலாளர் நாயகமான விக்னேஸ்வரன் விலகி நிற்க வேண்டும் என்று அவரை வைத்துக் கொண்டே நெற்றிக்கு நேராகவே அதற்கான ஆயத்தக் கூட்டத்தில் ஐங்கரநேசன் கூறியிருந்தார்.

ஆனால் அந்தக் கோரிக்கை ஏற்கப்படவேயில்லை. 'எழுக தமிழ்!' எவ்வாறு அந்ததடவை எழுந்தது என்பதை வாசகர்கள் அறிவார்கள்.

தான் அன்று சொன்ன விடயத்தை கனகச்சிதமாக நேற்று ஒப்பேற்றிக் காட்டியிருக்கின்றார் ஐங்கரநேசன்.

நேற்றைய போராட்டம் ஒட்டுமொத்த மக்களின் கருத்து நிலைப்பாட்டைப் படம் பிடித்துக் காட்டுவது போல அமைந்தது.

தப்பித் தவறி, தம்மையும் தமது தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தையும் முன்னிறுத்தி, அந்தரப்புக்கு போராட்டத்தின் வெளிப்பாடு ஏதேனும் ஆதாயம் தரும் விதத்தில், நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்குமானால் நேற்றைய போராட்டம் ஒரு குழு சார்ந்த நிகழ்வாக நடந்து முடிந்திருக்குமோ என்னவோ...?

'எழுக தமிழ்!' நிகழ்வு சுயாதீனமாக நடப்பதற்கு இடமளித்து, அதை ஏற்பாடு செய்யும் தமிழ் மக்கள் பேரவையின் தலைமைப் பொறுப்பில் இருந்து விலகி நில்லுங்கள் என்று நீதியரசர் விக்னேஸ்வரனுக்கு நெற்றிக்கு நேரில் கூறிய ஐங்கரநேசன், தமது அந்த வாதத்தின நியாயத் தன்மையை நேற்று நிரூபித்துக் காட்டியிருக்கின்றார் என்பதுதான் எனது கணிப்பீடு.

– மின்னல்–

## மணல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தியும் யாழ்ப்பாண நகரில் நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்று முற்பகல் 10.30 மணிக்கு இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின் ஆட்சிக்கு வந்த அரசு மணல் உள்ளிட்டவைக் கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரத்தை ரத்துச் செய்ததை அடுத்து வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக மணல், கிரவல் உள்ளிட்டவை மிதமிஞ்சி சட்டவிரோதமாக வருகின்றன. இதனைத் தடுத்து நிறுத்துமாறு கோரி மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

எனினும் பொறுப்பு வாய்ந்தவர்கள் நடவடிக்கை எதனையும் எடுக்காத நிலையே தொடர்ந்து வருகிறது.

சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுக்கும் மக்கள் மற்றும் அரசியல்வாதிகளுக்குக் கொலை அச்சுறுத்தலும் விடுக்கப்படுகின்றது எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதனைக் கண்டித்தும் மணல் கொள்ளையைத் தடுத்து நிறுத்தக் கோரியும் யாழ்ப்பாணம் மாநகரில் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

மக்கள் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகள் உட்பட பொதுமக்கள் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

'இயற்கையை நீ அழித்தாலோ, இயற்கையால் நீ அழிவாய்', 'சட்டவிரோத மணல் அகழ்வை நிறுத்து', 'மணல் அகழ்வு மற்றும் வழித்தட அனுமதியை அவசியமாக்கு', 'மணல் அள்ளும் உரிமையை அரசியல் வாதிக்கு வழங்காதே!', 'இந்த மண் எங்களின் சொந்தமண்; எங்களை மீறி யார் வந்தவன்?', 'இனிக் கடல் நீர்தான் வரும்' உள்ளிட்ட வாசகங்களைக் கொண்ட பதாதைகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் ஏந்தியிருந்தனர். (ஐ-07)

## இலங்கை ஒரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பவற்றின் அடியாக முன்வைக்கப்பட்ட சரியான அறிவிப்பாகும் எனவடமாகாணத்தின்முன்னாள் முதலமைச்சரும், முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசருமான சி.வீ.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஒரு பௌத்த நாடு அல்லவென அவர் வெளியிட்டிருந்த கருத்து தெற்கில் பலத்த சர்ச்சையை ஏற்படுத்தி முக்கிய பேசுபொருளாக மாறியுள்ளது. இது குறித்து மீண்டும் அவரிடம் வினவியதற்கே நேற்று இவ்வாறு அவர் பதிலளித்துள்ளார்.

இலங்கைக்கு பௌத்த மதம் வரும் முன்னர் தமிழ் மக்கள் வசித்துள்ளனர் என்பதற்கு வரலாற்று மூலாதாரங்களில் தகவல்கள் உள்ளன. இந்த நாட்டில் முதன்முதலில் பௌத்த மதத்தை ஏற்றுக் கொண்ட மக்களும் தமிழ் மக்களே எனவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கை ஒரு பௌத்த நாடு அல்லவென எடுத்துக்காட்டி நான் வெளியிட்டிருந்த கருத்து ஊடகங்களில் பௌத்த சமூக மதத் தலைவர்களினால் பெரும் விமர்சனத்துக்கு உட்பட்டுள்ளது. இருப்பினும், நான் விடுத்த அறிவிப்பு சரியானது. எனது கருத்தை விமர்சிப்பவர்களுக்கு பழைய வரலாற்றைப் பார்த்துவிட்டு கருத்துத் தெரிவிக்குமாறு நான் கேட்டுக் கொள்கின்றேன்.

இலங்கைக்கு பௌத்த மதம் வருவதற்கு முன்னர் இந்த நாட்டில் தமிழ் மக்கள் வாழ்ந்துள்ளனர் என வரலாறு கூறுகின்றது. வரலாற்றாசிரியர்களும், வரலாறு தொடர்பில் கலாநிதிப் பட்டங்களை முடித்தவர்களினதும் கருத்து இதுவாகும்.

இது நான் எழுந்தமானமாக விடுத்த அறிவிப்போ அல்லது பௌத்த மதத்தை அவமதிப்பதற்காகத் தெரிவித்த கருத்தோ அல்ல. நான் சொன்ன விடயங்கள் உண்மையானவை. எனது கருத்துத் தவறாக இருந்தால், புராதன மூலாதாரங்களை வைத்துத் திருத்தி விடுங்கள். அப்போது எனது தவறைத் திருத்திக் கொள்ள நான் தயாராகவுள்ளேன். – எனவும் அவர் தேசிய ஊடகமொன்றிடம் கூறியுள்ளார்.

## கம்பரெலியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்றுள்ளன எனக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க ஆணைக்குழு அமைக்கப்படவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த ஆட்சி காலத்தில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி திட்டங்களை இந்த அரசு கைவிடாது. தேசிய அபிவிருத்திகளான பருத்தித்துறை துறைமுக அபிவிருத்தி, பலாலி விமான நிலைய அபிவிருத்தி என்பன தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

சில அபிவிருத்தித் திட்டங்களில் குறைபாடுகள் காணப்படுகின்றன. அவற்றை நிவர்த்தி செய்து அந்த அபிவிருத்தியைத் தொடர்ந்து முன்னெடுப்போம். அதன் ஊடாக நிலையான அபிவிருத்தியை நோக்கிச் செல்வோம். – என்றார். (ஜ–07)

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியாயமானதொன்றென்பதை இலங்கைத் தமிழரசுக்கட்சி நிரூபித்திருக்கிறது.

– இப்படித் தெரிவித்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம். ஏ. சுமந்திரன்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 70ஆவது ஆண்டு நிறைவு விழாவில் 70 வருட சரித்திரத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி எதிர்கொண்ட சட்ட சவால்கள் என்ற தலைப்பில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

1949 ஆம் ஆண்டு டிசெம்பர் 18ஆம் திகதி இலங்கைத் தமிழரசுக் கட்சி உருவான வரலாற்று பின்னணி அனைவருக்கும் நன்றாக தெரிந்த ஒன்று. பிரஜா உரிமை சட்டம் மற்றும் இந்திய பாகிஸ்தானிய பிரஜா உரிமை சட்டம் நிறைவேற்றப்பட்ட போது அதற்கு எதிராகத் தந்தை செல்வாவும் வைத்திய கலாநிதி நாகநாதன் மற்றும் கு. வன்னியசிங்கமும் அகில இலங்கை தமிழ் காங்கிரசிலிருந்து விலகி, எதிர்த்து வாக்களித்து இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியை ஆரம்பித்தனர்.

மேற்சொன்ன சட்டங்களும் அதற்கு பின்னர் 1956 இல் நிறைவேற்றப்பட்ட அரசகரும மொழிச் சட்டமும் சோல்பரி அரசமைப்பின் 29ஆவது பிரிவிற்கு முரணாய் இருந்த போதும் அச்சட்டங்களுக்கு எதிரான சவால்கள் நீதிமன்றத்தில் பலனளித்திருக்கவில்லை.

ஆரம்ப காலங்களிலே காந்தியவழிகளாகிய ஒத்துழையாமை, சட்டமறுப்பு, சத்தியாகிரகம் ஆகிய போராட்ட வடிவங்களையே இலங்கை தமிழ் அரசுக் கட்சி பின்பற்றியது. 1956ஆம் ஆண்டிலிருந்து கிரமமாக நடத்தப்பட்ட இப்போராட்டங்கள் 1961ஆம் ஆண்டு அரச இயந்திரத்தை வடக்கு கிழக்கெங்கும் முடக்குகின்ற அளவிற்கு வியாபித்தது. அதன் விளைவாக இலங்கை தமிழ் அரசு கட்சி அவசர கால சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்டு அதன் தலைவர்கள் உட்பட 67 உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு பனாகொடையில் சிறை வைக்கப்பட்டனர்.

1970ஆம் ஆண்டிற்கு பின்னர் முதலாம் குடியரசு அரசியல்யாப்பு உருவாக்கப் பணிகளிலிருந்து வெளியேறியபின் ஒத்துழையாமையும் சட்டமறுப்புப் போராட்டமும் உச்ச நிலையை அடைந்தன. தந்தை செல்வா தன்னுடைய நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்தமை தொடக்கம் நாங்கள் புதிய அரசமைப்பிற்கு கட்டுப்பட்டவர்கள் அல்லர் என்கின்ற நிலைப்பாடு வலுப்பெற்றது. அதன் பிரதிபலிப்பாக தமிழர் கூட்டணி உருவாக்கப்பட்டு, பின்னர் அது தமிழர் விடுதலை கூட்டணியாக மாறி, 1976ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சமஷ்டி ஆட்சிக்கான எமது ஜனநாயகத் தீர்மானங்கள் புறக்கணிக்கப்பட்டமையால் ஐரோப்பியர்களிடம் போரில் இழந்த எமது இறைமையை மீள அமைப்போம் என்பதே அத்தீர்மானம். அத்தீர்மானத்தை விநியோகித்த காரணத்தினால் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் நாயகம் மற்றும் இக்கட்சியின் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக மூன்று மேல்நீதிமன்ற நீதிபதிகள் முன்பாக வழக்குத் தொடரப்பட்டது.

எதிரிகள் சார்பில் தந்தை செல்வா தலைமையில் ஜீ.ஜீ. பொன்னம்பலம், முருகேசு திருச்செல்வம், இராணி சட்டத்தரணிகள் உட்பட 67 தமிழ் சட்டத்தரணிகள் ஆஜரானார்கள். முதலாம் குடியரசு அரசியல்யாப்பு வலுவற்றதென்றும் அவசரகால சட்டவிதிகள் முறையாகப் பிரகடனப்படுத்தப்படவில்லை என்றும் வாதிட்டார்கள். எதிரிகளுடைய இரண்டாவது வாதத்தை ஏற்றுக்கொண்ட ட்ரயல் அட் பார் நீதிமன்றம் எதிரிகளை விடுவித்தது. இத்தீர்ப்பை உச்ச நீதிமன்றம் மாற்றி அமைத்த போதும் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீளக் கைது செய்யப்படவில்லை. இவ்வழக்கு இலங்கை சட்ட சரித்திரத்திலே மிகவும் முக்கியமான இடத்தை பெற்றுள்ளது.

1976ஆம் ஆண்டிற்கு பின்னர் இலங்கைத் தமிழ் அரசுக்கு கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணியாகவே இயங்கியது. தமிழர் விடுதலை கூட்டணி செயற்பட முடியாமல் நீதிமன்ற கட்டளையினால் 2003ஆம் ஆண்டு முடக்கப்பட்ட போது மீண்டும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியாக இயங்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

ட்ரயல் அட் பார் வழக்கு முடிவிற்கு பின்னர் நீதிமன்றங்களினூடாக தமிழ் மக்களின் உரிமைகளை நிலைநாட்டும் போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

1978 ஆம் ஆண்டு பயங்கரவாத தடைச்சட்டம் உருவாக்கப்பட்ட பின் அச்சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்ட தமிழ் இளைஞர்களுக்காக எமது கட்சியைச் சார்ந்த சட்டத்தரணிகள் வழக்காடினார்கள். அதே போல் இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பின் கீழ் அடிப்படை உரிமை மீறல் வழக்குகளையும் முன்னின்று நடத்தினார்கள். யுத்த காலத்தின் போது மீறப்பட்ட உரிமைகள் சம்பந்தமாக பலதரப்பட்ட வழக்குகள் நீதிமன்றங்களிலே முன்னெடுக்கப்பட்டு வாதாடப்பட்டன. உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் தமிழ் மக்களுடைய பூர்வீக நிலங்கள் அபகரிக்கப்படுவதற்கெதிராக 2003 ஆம் ஆண்டு கட்சியின் தற்போதைய தலைவர் மாவை சேனாதிராசா அவர்களின் பெயரிலே உயர் நீதிமன்றில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. 2007 ஆம் ஆண்டு இவ்வழக்கில் வழங்கப்பட்ட இடைக்கால உத்தரவின்படி இந்நிலங்களிலே மக்கள் மீளவும் மீள்குடியேற்றம் செய்ய அனுமதிக்கப்பட்டார்கள். இதே காலகட்டத்தில் கிழக்கில் சம்பூரிலிருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் அவர்கள் நிலங்களிலே மீண்டும் மீள்குடியேற்றப்பட வேண்டும் என்ற கட்டளையும் உச்சநீதிமன்றில் பெறப்பட்டது. இலங்கை தமிழ் அரசுக்கட்சி முன்னெடுத்த இவ்வழக்குகளின் காரணமாக இராணுவத்துக்கென்று அபகரிக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கான ஏக்கர் பூர்வீக நிலங்கள் திரும்பவும் எமது மக்களுக்கு கிடைத்திருக்கின்றன. இன்னமும் விடுவிக்கப்படவிருக்கின்ற நிலங்கள் தொடர்பாக மேற்சொன்ன வழக்கு இப்பொழுதும் நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்படுகின்றது. இது தவிர, வேறு பல முக்கிய விடயங்களிலும் எமது மக்களுடைய உரிமை மீறல்கள் சம்பந்தமாக நீதிமன்றத்தை நாடி பல சந்தர்ப்பங்களிலே வெற்றி வாகை சூடிய பெருமை இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு உண்டு.

கொழும்பிலிருந்து தமிழர்கள் வெளியேற்றப்பட்டது தொடக்கம் அதிகாரப்பகிர்வுக்கெதிராக கொண்டு வரப்பட்ட திவிநெகும சட்டமூலத்தை எதிர்த்தது வரை பலதரப்பட்ட உதாரணங்களை இதற்கு மேற்கோளாக காட்டலாம்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியினுடைய இச்சட்ட அணுகுமுறையானது தமிழ் மக்களுடைய உரிமைகளோடு மட்டுப்படுத்தப்படவில்லை. நாட்டிலே பொதுவாக அடக்குமுறைக்கெதிராகவும் ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கெதிராகவும் சட்டத்தின் ஆட்சி சீர்குலைக்கின்ற போது மற்றும் நல்லாட்சி பண்புகளை மேம்படுத்துவதற்கும் இலங்கை தமிழரசுக் கட்சி முன்னோடியாக திகழ்ந்திருக்கிறது. சென்ற வருட இறுதியிலே நாட்டின் அரசமைப்புக்கு மாறாக ஜனாதிபதியே செயற்பட்ட போது அதை எதிர்த்து நாட்டிலே ஒரு பாரிய சட்டப்புரட்சியை ஏற்படுத்தி முழு நாட்டிலும் ஜனநாயகத்தை மீண்டும் நிலைநாட்டிய முயற்சியில் இலங்கை தமிழரசுக்கட்சியே முன்னணி வகித்தது.

இலங்கையின் நீதித்துறையில் நாம் நம்பிக்கை வைக்க முடியாது என்பதை நிரூபிப்பதற்காக நீதிமன்ற சவால்களை நாம் முன்னெடுக்கக்கூடாது என்ற அவ்வணுகுமுறையை புறக்கணிக்கிறவர்கள் மத்தியில் நம்பிக்கை இருந்தாலும், இல்லாவிட்டாலும் சட்ட சவால்களைப் பதிவு செய்ய வேண்டிய முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்படுகின்ற கட்சி, இலங்கை தமிழரசுக் கட்சி. பதிவு செய்வதற்காகவாவது தொடரப்படுகிற வழக்குகளைத் திறமையாக கையாளுவதன் மூலம் அநேக தடவைகளில் வெற்றிகளையும் ஈட்டி எமது மக்களுக்கு நிவாரணங்களை பெறுவதோடு உரிமை மீறல்களை நிரூபிக்கின்ற செயற்பாட்டில் இலங்கை தமிழரசுக் கட்சி தனித்துவமான பங்களிப்பை செய்து வருகிறது.

1961ஆம் ஆண்டு சில மாதங்கள் தடை செய்யப்பட்ட இலங்கை தமிழரசுக் கட்சி 1976 இல் பாரியதொரு சட்ட சவாலுக்கு முகங்கொடுக்க நேர்ந்தது. அதை தந்தை செல்வா தலைமையிலான சட்டவித்தகர்கள் முறியடித்து வெற்றி கண்டார்கள். போருக்கு பின்னர் 2013 ஆம் 2014 ஆம் ஆண்டுகளில் இலங்கை தமிழரசுக்கட்சியை தடை செய்யவும் அதன் நாடாளுமன்ற உறுப்பினர்களை சிறைக்கனுப்பவும், சொத்துக்களை பறிமுதல் செய்வதற்கும் 6 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. முதல் 5 வழக்குகளும் எமது வடக்கு மாகாண சபை தேர்தல் அறிக்கையில் பிரிவினையைக் கோருவதாகவும் அரசமைப்பின் 6ஆம் திருத்தத்திற்கு மாறான செயற்பாடு என்றும் முறைப்பாடு செய்யப்பட்டது. 2014 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட 6வது வழக்கிலே இலங்கை தமிழரசுக்கட்சியினுடைய யாப்பு இணைப்பாட்சியை கொள்கையாக கொண்டிருப்பதன் காரணமாக பிரிவினைக்கு வழிவகுக்கும் என்று முறைப்பாடு செய்யப்பட்டது. இந்த வழக்கு முதலிலே விசாரிக்கப்பட்டு வாதிக்கப்பட்டது. சந்திரசோம எதிர் மாவை சேனாதிராசா என்கின்ற இவ்வழக்கின் தீர்ப்பு 2017 ஆகஸ்ட் 4 ஆம் திகதி பிரதம நீதியரசர் உட்பட 3 நீதிபதிகளடங்கிய உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்டது. சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த தீர்ப்பின்படி இறைமை, சுயநிர்ணய உரிமை ஆகியவற்றின் அடிப்படையில் இணைப்பாட்சி ஆட்சிமுறை ஒன்றை கோருவதற்கு இலங்கை தமிழரசுக் கட்சிக்கு உரித்துண்டு என்று கூறப்பட்டுள்ளது. 70 வருடங்களுக்கு முன்னர் இணைப்பாட்சியை கோரி உருவாக்கப்பட்ட எமது கட்சி 1951ஆம் ஆண்டு திருகோணமலை மாநாட்டிலே இவ்வாட்சிமுறை எமது இறைமையின் அடிப்படையிலும் சுயநிர்ணய உரிமையிலிருந்தும் எழுகின்றதென்றும் பிரகடனப்படுத்தி இருக்கிறோம். இணைப்பாட்சியானது நாட்டை இரண்டாக பிரிக்கும் என்று சிங்கள தலைவர்கள் தமது மக்களுக்கு ஆரம்ப காலம் தொட்டே பொய்ப்பிரசாரம் செய்து வந்துள்ளனர். 1961ஆம் ஆண்டு கட்சியைத் தடை செய்த போது கூட, அப்போதைய பிரதம மந்திரி சிறிமாவோ பண்டாரநாயக்க இதையே கூறியிருந்தார். பலதசாப்தங்களுக்கு பிறகு, இடைப்பட்ட காலத்திலேயே தனிநாட்டுக்கான ஆயுத போராட்டத்தை நடத்திய பின்னரும் கூட, இலங்கையின் உச்ச நீதிமன்றமே சமஷ்டி ஆட்சி முறையைக் கோருவது சட்டபூர்வமான செயற்பாடு என்று நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது.

சூழ்நிலைகள் சாதகமாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் சர்வதேச சட்டத்தின் கீழ் எமக்கு இருக்கின்ற உரித்தை இலங்கையின் நீதிமன்றங்களில் கூடத் தொடர்ச்சியாக வாதித்தன் மூலம் எமது கொள்கை நிலைப்பாடு சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் நியாயமானதொன்றென்பதை இலங்கை தமிழரசுக் கட்சி நிரூபித்திருக்கிறது. சமஷ்டி என்கின்ற அரசியல் தீர்வு விடயத்தில் மட்டுமல்லாது எமது சமூக, பொருளாதார, கலாசார உரித்துக்கள் சம்பந்தமாகவும் இதே அணுகுமுறை பலசாதகமான முடிவுகளை எமக்குத் தந்திருக்கிறது.

எமது சூழ்நிலையில் சட்டத்தின் துணையை நாடுவது பிரயோசனமற்றது என்ற நிலைப்பாட்டை எடுக்கின்ற மற்றைய கட்சிகளை விட மாறுபாடான நிலைப்பாட்டை எடுத்து அதிலே முன்னேற்றத்தைக் கண்டிருப்பது இலங்கை தமிழரசுக் கட்சி மட்டுமே – என்றார். (ஜ–07)

## இலங்கைத் தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேனாதிராசா தலைமையில் நேற்றுக் காலை நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் இடம்பெற்றது.

கட்சித்தலைவர் மாவை சேனாதிராசா கட்சிக் கொடியை ஏற்றி வைக்க நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமாகிய இரா.சம்பந்தன், இலங்கைத்தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கே.துரைராஜசிங்கம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான புளொட், ரெலோ அமைப்புக்களின் தலைவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களுமான த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சி. சிறிதரன், சீ.யோகேஸ்வரன், ஈ.சரவணபவன், எஸ்.சிவமோகன், என். கோடீஸ்வரன், ஜி.சிறீநேசன், வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சி.வீ.கே.சிவஞானம், யாழ்.மாநகர முதல்வர் ஆனல்ட், உலகத்தமிழர் பேரவையின் தலைவர் வணபிதா. எஸ்.ஜே. இம்மானுவேல், தென்னிந்தியத் திருச்சபையின் ஓய்வுநிலை ஆயர் வணக்கத்துக்குரிய ஜெபநேசன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

நேற்றைய நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், புளொட் தலைவர் த.சித்தார்த்தன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். (ஜ–07)

காலைக்கதிர்
Kalaikathir



## முழு ஆணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களின் ஆணையில் ஒரு பகுதிகூட வேறு யாருக்கும் போகக் கூடாது என்றும் அவர் இடித்துரைத்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற இலங்கை தமிழரசுக் கட்சியின் 70ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்

1987 ஆம் ஆண்டு இலங்கை – இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அது ஒரு சர்வதேச ஒப்பந்தம். தன்னிச்சையாக ஒரு நாடு அந்த ஒப்பந்தத்தில் இருந்து விலக முடியாது. அது நிறைவேற்றப்படவேண்டும். அது ஒரு சர்வதேசக் கடமை. 1988 ஆம் ஆண்டு 13 ஆம் திருத்தச் சாசனம் நிறைவேற்றப்பட்டது. அதுதான் அரசியல் சாசன ரீதியாக ஏற்பட்ட முதல் ஆட்சி அதிகாரங்களைப் பொறுத்தவரையில் ஒரு திருத்தம்.

அது இன்னமும் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. அது முழுமையாக நிறைவேற்றப்படவேண்டும். அது நிறைவேற்றப்படுமென்ற பல வாக்குறுதிகளை பல அரசுகள் கொடுத்திருக்கின்றன. அவற்றை அவர்கள் இன்னமும் நிறைவேற்றவில்லை. 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் நிறைவேற்றப்பட்ட பிறகு அது ஒரு முழுமையான அரசியல் தீர்வாக அமையவில்லை என்ற காரணத்தினால் விசேடமாக அந்தத் திருத்தத்தின் அடிப்படையில் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி பங்குபற்றிக் கொள்ளாத காரணத்தின் நிமித்தம் அதற்குப் பிறகு வந்த அரசுகள், அதில் முதலில் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ காலத்திலிருந்த அரசு, மங்கள முனசிங்க தெரிவுக் குழுவின் மூலமாக அந்தப் 13 ஆவது அரசியல் சாசனத்தை முன்னேற்றுகின்ற ஒரு பிரேரனையை முன் வைத்திருக்கின்றார்கள்.

அதற்குப் பிறகு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தன்னுடைய காலத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த புதிய அரசியல் சாசனம். அதில் உள்ளடங்கியிருக்கின்ற அதிகாரப் பகிர்வு சம்பந்தமாக ஒரு பரிந்துரைப்பு வைக்கப்பட்டிருக்கின்றது. மூன்றாவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினுடைய காலத்தில் நிபுணர் குழுவை நியமித்து ஒரு சர்வகட்சி மாநாட்டை அமைத்து அதற்குப் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமை தாங்கியிருந்தார்.

அந்தக் குழுவினர் தமது அறிக்கைகயைச் சமர்ப்பித்திருக்கின்றார்கள்.

அதில் சொல்லப்பட்டிருக்க கூடிய கருத்து என்னவென்றால் அதியுச்ச அதிகாரப் பகிர்வு நடைபெறவேண்டும். அந்தந்தப் பகுதியில் வாழ்கின்ற மக்கள் தங்களுடைய தலைவிதியை தாங்களே நிர்ணயிக்கக் கூடிய நிலைமைகள் இருக்கவேண்டும். அவ்விதமான அதிகாரப் பகிர்வு உருவாகவேண்டும் என்பதுதான்.

உலகத்தில் பல்வேறு நாடுகளில் இந்த விடயம் சம்பந்தமான முறையில் அதிகாரப் பகிர்வு பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கிறது. அவற்றையெல்லாம் பார்த்து ஓர் அறிக்கையை நீங்கள் சமர்ப்பிக்கும் படியாக கேட்டிருந்தார். அதனை நிபுணர் குழுவும் அறிவித்திருக்கின்றார்கள். பேராசிரியர் திஸ்ஸ விதாரணவும் அறிவித்திருக்கின்றார்.

இவை மூன்றும் 13 ஆம் அரசியல் சாசனத்தை நியாயயமான அளவிற்கு முன்னேற்றுகின்ற முயற்சிகள். அவை பதிவில் இருக்கின்றன. அடுத்தடுத்து வந்த அரசுகளினால் மேற்கொள்ளப்பட்டுவந்த விடயங்கள்தான் இவை. 88 ஆம் ஆண்டு முதலாவது அரசியல் திருத்த சாசனம் உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்தான விடயங்கள் ஒரு முப்பது வருட கால எல்லைக்குள் பதிவில் இருக்கின்றன. இவை மூன்றும் 13 ஆவது அரசியல் சாசனத்தை நியாயமான அளவுக்கு முன்னேற்றுகின்ற முயற்சிகள், முடிவுகள் பதிவில் இருக்கின்றன.

அடுத்தடுத்து வந்த அரசுகளினால் மேற்கொள்ளப்பட்ட விடயங்கள் ஒரு முப்பது வருட கால எல்லைக்குள் நடந்தன. அதாவது 88 ஆம் அண்டு முதலாவது சாசனத் திருத்தம் நிறைவேற்றப்பட்டது. நாங்கள் தற்போது 2019 ஆம் ஆண்டில் இருக்கின்றோம். இந்த முயற்சி முப்பது வருடங்களாக எடுத்து வரப்படுகின்றது. இவை நிறைவேற்றப்படவேண்டும். இவற்றில் காணப்படுகின்ற முன்னேற்றங்கள் நிறைவேற்றப்பட வேண்டும்.

புதிய நாடாளுமன்றம் தெரிவு செய்யப்பட்டபோது ஏகமனதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் அதிகாரப் பகிர்வை கையாளக்கூடிய வகையில் புதிய அரசியல் சாசனம் உருவாக்கப்பட வேண்டுமென்று கூறப்பட்டது. நாடாளுமன்றத்தால் ஏகமனதாக பிரேரணை நிறைவேற்றப்பட்டு அந்தப் புதிய அரசியல் சாசனம் வரவேண்டும். அந்தப் புதிய அரசியல் சாசனத்தில் நான் கூறிய சகல விடயங்களும் உள்ளடக்கப்பட வேண்டும். இது அரசின் கடமை.

அரசு சர்வதேச ரீதியாகச் சில வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கின்றது. அதை பாரதப் பிரதமருக்கும் கொடுத்திருக்கிறது. பாரதப் பிரதமர் இந்த விடயம் சம்பந்தமாக தன்னுடைய கருத்துக்களைத் தெளிவாகக் கூறியிருக்கின்றார்.

இலங்கையில் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டது ஒரு நல்ல விடயமாக இருக்கலாம். ஆனால் தமிழ் மக்களின் பிரச்சினைகள் அத்துடன் முடிவடையவில்லை. தமிழ் மக்கள் இலங்கைத் தீவில் இரண்டாம் தரப் பிரஜைகளாக கணிக்கப்படுகின்றார்கள். அதை ஏற்றுக் கொள்ள முடியாது. அவர்களுக்குச் சமத்துவ அடிப்படையில் ஒரு அரசியல் தீர்வு கொடுக்கப்படவேண்டியது அத்தியாவசியம். .

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவருடைய வெளிவிவகாரச் செயலாளர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸும் இந்திய அரசுக்கு வாக்குறுதி கொடுத்திருக்கின்றார்கள். நாங்கள் 13 ஆவது அரசியல் சாசனத் திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றுவோம். அதற்கு மேலதிகமாக அதைக் கட்டியெழுப்பி அர்த்தபூர்வமான அதிகாரப் பகிர்வை ஏற்படுத்துவதற்கு நாங்கள் வழிசெய்வோம் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அது நடைபெற வேண்டும். ஆனால் அது நடைபெறவில்லை.

இது விடயம் சம்பந்தமாக இந்திய வெளிவிவகார அமைச்சர், இலங்கை வெளிவிவகார அமைச்சர், இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர்கள் பல முறைகளில் பேசியிருக்கின்றார்கள். பல வாக்குறுதிகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவேண்டும்.

இலங்கையில் யுத்தம் முடிவடைந்த பிறகு நியமிக்கப்பட்ட ஒரு முக்கியமான குழு கற்ற பாடங்களும் நல்லிணக்க ஆணைக்குழுவும். படித்தவர்கள், பெரியவர்கள், நேர்மையானவர்கள், பக்குவமானவர்கள் மஹிந்தவால் தெரிவு செய்யப்பட்டு அந்தக் குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழு நாட்டினுடைய முக்கியமான பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்று சிபாரிசு செய்திருக்கிறது. அதில் நாட்டினுடைய முக்கிய பிரச்சினை என்னவென்றால், இன்றைக்குச் சமத்துவமாக எல்லா இனங்களும் வாழவில்லை. நல்லிணக்கம் ஏற்படுவதற்கு அதியுச்ச அதிகாரப் பகிர்வு இடம்பெறவேண்டுமென்று அந்த நல்லிணக்க குழு தன்னுடைய சிபாரிசை செய்திருக்கின்றது.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் ஒரு தீர்மானம் நிறைவேற்றகப்பட்டது. அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பொழுது அதில் இலங்கை அரசு அதியுச்ச அதிகாரப்பகிர்வின் அடிப்படையில் ஒரு தீர்வைக் காண்பதற்கு இணங்கியிருக்கின்றது. அதை நாங்கள் வரவேற்கின்றோம். அது நிறைவேற்றப்பட வேண்டுமென்று கூறப்பட்டிருக்கின்றது. ஆகவே அது நிறைவேற்றப்பட வேண்டும்.

இலங்கை அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சு நடந்த பொழுது உதவிய நாடுகளான நோர்வே, ஐக்கிய இராச்சியம், ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா, ஜப்பான, போன்ற நாடுகளுக்கு இலங்கை அரசு வாக்குறுதி கொடுத்திருக்கின்றது. அதாவது அதிகாரப் பகிர்வின் ஊடாக நாட்டில் சமத்துவமாக மக்கள் வாழக் கூடிய வகையில் ஓர் அரசியல் தீர்வை ஏற்கடுத்துவோம் என்று சொல்லியுள்ளது.

அந்த நாடுகளும் தங்களுடைய கருத்துகளைக் கூறியிருக்கின்றார்கள். அமைப்பு ரீதியாக மாற்றங்கள் ஏற்பட வேண்டும். ஆழமான மாற்றங்கள் ஏற்பட வேண்டும். அவ்விதமான மாற்றங்களின் ஊடாக ஒரு நியாயாமான, நிரந்தரமான அரசியல் தீர்வு ஏற்பட வேண்டும் எனக் கூறியிருக்கின்றார்கள். அதே நேரத்தில் அமெரிக்கா தனிப்பட்ட முறையிலும் இலங்கைக்குக் கூறியிருக்கின்றது. அதாவது உங்களுடைய பழைய நிலைமைகளில் உள்ளக சுயநிர்ணய உரிமையைப் பற்றிப் பேசியிருக்கின்றீர்கள், சமஷ்டியைப் பற்றி பேசியிருக்கின்றீர்கள், அதியுச்ச அதிகாரப் பகிர்வைப் பற்றி பேசியிருக்கின்றீர்கள். ஆனபடியால் அந்த அடிப்படையில் ஒரு தீர்வு வர வேண்டுமென்றும் அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

இவை நிறைவேற்றப்பட வேண்டும். இவற்றை நிறைவேற்றுவதற்கு நாங்கள் திட்டங்களை வகுத்து உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் என்னவிதமாகச் செயற்படப்போகின்றோம் என்பதை முடிவெடுத்து அதைச் செய்ய வேண்டும். அது தான் எங்களுடைய கடமை. அது தான் எங்களுடைய எதிர்காலம்.

ஓர் அரசியல் தீர்வைப் பேணிக் கொள்ளாத அரசியல்வாதிகள் இன்றைக்கு எங்களுக்குத் தேவையில்லை. கற்பனையில் வாழ்கின்ற அரசியல்வாதிகள் எமக்குத் தேவையில்லை. என்ன செய்வதென்று தெரியாமல் தத்தளிக்கின்ற அரசியல்வாதிகள் எமக்குத் தேவையில்லை. இது ஒரு நீண்ட பயணம். நீண்ட தூரம் நாங்கள் பயணித்திருக்கின்றோம். அதிகாரப் பகிர்வின் அடிப்படையில், அதியுச்ச அதிகாரப் பகிர்வின் அடிப்படையில், பல தேவையான அதிகாரங்களை நாங்கள் பெற்று எமது மக்கள் சமத்துவமாக, நீதி பெற்றவர்களாக, சமாதானமாகவும் கௌரவமாகவும் வாழக் கூடிய நிலைமை ஏற்படவேண்டும்.

இந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த பிறகு இந்தியாவினுடைய வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு விஜயம் செய்த பொழுது, இரண்டு நாள்களுக்குப் பிறகு அவர் கூறிய செய்தி என்னவென்றால், நீங்கள் சமத்துவத்தின் அடிப்படையில் – நீதியின் அடிப்படையில் – கௌரவத்தின் அடிப்படையில் – சமாதானத்தின் அடிப்படையில் ஒரு அரசியல் தீர்வை ஏற்படுத்த வேண்டுமென்று இந்தியப் பிரதமர் எதிர்பார்க்கிறார் என இலங்கை ஜனாதிபதியிடம் கூறியிருக்கின்றார்.

இது சாதாரணமான சொற்கள் அல்ல. ஜனாதிபதி கோட்டாபய ஒரு வாரத்திற்குள் இந்தியாவிற்குச் சென்றபோது அவருக்கும் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையில் நடைபெற்ற பேச்சின் பொழுது ஒரு கூட்டாக ஊடக சந்திப்பு நடைபெற்றது. அந்த ஊடக சந்திப்பின் போது இவ்விதமான ஒரு தீர்வை ஏற்படுத்தித் தமிழ் மக்கள் இலங்கையில் கௌரவமாக வாழக் கூடிய சூழ்நிலை ஏற்பட வேண்டுமென்று நாங்கள் இலங்கை அரசிடம் கூறியிருக்கின்றோம், அதை நாங்கள் எதிர்பார்க்கின்றோம் என்று மோடி கூறியிருக்கின்றார்.

இவை நடைபெற வேண்டும். இவற்றை நிறைவேற்றுவதுதான் எங்களது கடமை. இவற்றை எவராலும் நிறைவேற்ற முடியாது என்றில்லை. கற்பனையில் வாழ்கின்றவர்களால் நிறைவேற்ற முடியாது. எமது மக்களுடைய அரசியல் தீர்வு சம்பந்தமாக – எமது மக்களுடைய அரசியல் பிரச்சினைகள் சம்மந்தமாக – இது வரையில் தீவிரமாக, ஆழமாக உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் ஈடுபடாதவர்கள் இந்தக் கருமங்களைக் கையாள முடியாது. அதை எமது மக்கள் புரிந்த கொள்ளவேண்டும். எங்களுடைய மக்களுடைய ஒற்றுமை எங்களது முக்கியமான பலம்.

தந்தை செல்வாவின் முக்கியமான கொள்கைகளைப் பற்றியும் நான் சில விடயங்களை இங்கு பேச விரும்புகின்றேன். தந்தை செல்வா தமிழ் பேசும் மக்களை ஒற்றுமைப்படுத்தினார். வடக்கில், கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்கள், தமிழ் பேசும் முஸ்லீம் மக்கள் எல்லாரையும் ஒற்றுமைப்படுத்தினார். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெயரில், சின்னத்தில் போட்டியிட்டு அவர்கள் தெரிவு செய்யப்பட்டவர்கள்.

தந்தை செல்வா தமிழ் மக்கள் கௌரவமாக, பாதுகாப்பாக இந்த நாட்டில் வாழ்வதாக இருந்தால் என்ன செய்ய வேண்டும் எனக் கூறியிருக்கிறார். தமிழ் மொழிக்கும் தமிழ் மக்கள் வாழ்கின்ற பிரதேசத்திற்கும் இடையில் ஒரு பிரிக்க முடியாத தொடர்பு இருக்கின்றது. அவை ஒன்றாகப் பிணைந்த பொருள்கள். அவை இரண்டும் தமிழ் மக்களுக்குரியவை. தமிழ் பேசும் மொழி எங்கு நிலவுகிறதோ அந்தக் காணி தமிழ் மக்களுக்குரியது. அந்த அடிப்படையில் பண்டா – செல்வா ஒப்பந்தம், டட்லி – சொல்வா ஒப்பந்தம் இலங்கையில் கைச்சாத்திடப்பட்டன. அவை தான் அடிப்படை. அத்தகைய அடிப்படை மொழி தமிழ் மொழி, தமிழ் மக்கள் வாழ்கின்ற பிரதேசம் அவர்களுடைய காணி வடகிழக்கு, இதை எமது முஸ்லீம் மக்களும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அது பெரியவருடைய முக்கியமான கொள்கை. மூன்றாவது இந்தக் கொள்கையின் அடிப்படையில் தமிழ் மக்கள் விசேசமாக வடகிழக்கில் தம்மை ஆதரித்துத் தமிழ் மக்களுடைய ஆணையை பெற்ற தலைவர் தந்தை செல்வா என்பதையும் தமிழரசுக் கட்சி என்பதையும் நிருபித்தார். அது தொடர வேண்டும். நாங்கள் எமது மக்களுக்கு நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும்.

56 ஆம் ஆண்டுக்குப் பிறகு நடைபெற்ற ஒவ்வொரு தேர்தல்களிலும் எமது மக்கள் எமது கட்சியை ஆதரித்திருக்கின்றார்கள். அது தொடர வேண்டும். நான் உங்களுக்கு சொல்லிய கடமைகள், நாங்கள் கையாள வேண்டிய கடமைகள். நாங்கள் பொறுப்பெடுக்க வேண்டிய கடமைகள். எதிர்காலத்தில் சர்வதேச ரீதியாகவும் உள்நாட்டிலும் நாங்கள் நிறைவேற்ற வேண்டிய விடயங்களை நாங்கள் நிறைவேற்றுவதென்றால் உங்களுடைய ஆணையை முழுமையாக நாங்கள் பெற வேண்டும். அந்த ஆணையின் ஒரு பகுதியேனும் வேறு எவருக்கும் போகக் கூடாது. அது முக்கியம். அத்தியாவசியம். இதுதான் எங்களுடைய நிலைப்பாடு.

தந்தை செல்வா 49 ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சியை ஆரம்பித்த காலம் தொடக்கம் இன்றைக்கு நாங்கள் 2019 ஆம் ஆண்டில் இருக்கிறோம். ஆக 70 ஆண்டுகாலமாக ஒரு நீண்ட பயணத்தில் ஈடுபட்டிருக்கின்றோம். நாங்கள் எங்கே போகின்றோம் என்று எங்களுக்கு தெரியும். அந்த இலக்கை அடைவதற்கு எதைச் செய்ய வேண்டும் என்பதைப் பற்றி வாக்குறுதிகள் பெறப்பட்டிருக்கின்றன. அவை நிறைவேற்றப்பட வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளை அழிப்பதற்காக சர்வதேச சமூகம் விசேடமாக இந்தியா உட்பட பல்வேறு நாடுகள் இலங்கை அரசுக்கு உதவி புரிந்தார்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்ட பிறகு நாங்கள் ஒரு நியாயமான, நிரந்தரமான அரசியல் தீர்வை காண்போம் என்ற இரு நிபந்தனையின் அடிப்படையில்தான். ஆனால் தற்பொழுது அந்த வாக்குறுதிகளில் இருந்து இலங்கை அரசதரப்பினர்கள் தப்பிக்க முயற்சிக்கின்றார்கள்.

அதற்கு சர்வதேச சமூகம் இடமளிக்கக்கூடாது. அதற்கு சர்வதேச சமூகம் இடமளித்தால் அதனுடைய அர்த்தம் என்னவென்றால் தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கு அவர்களும் உதவுகின்றார்கள் என்பது தான். அந்த நிலைமை இருக்க முடியாது. அந்த நிலைமை இருக்கக் கூடாது. உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஐக்கிய நாடுகள் சபையினுடைய தீர்மானங்கள், சிவில் அரசியல் உரிமைகள், பொருளாதார சமூக, கலாசார உரிமைகளின் அடிப்படையில், அந்த ஒப்பந்தங்களின் அடிப்படையில், எமக்கு உள்ளக சுயநிர்ணய உரிமையுண்டு. அது மறுக்கப்பட்டால் அதற்கு வெளி யான சுயநிர்ணய உரிமையுண்டு. இதை சர்வதேச சமூகம் வலியுறுத்த வேண்டும்.

நாங்கள் எவரையும் பகைக்கவில்லை. நாங்கள் எவருடனும் மோத விரும்பவில்லை. எங்களுக்கு பெரியவர் நெடுக சொல்லுவார் சம்பந்தன் நாங்கள் சிங்கள மக்களைப் பகைக்க கூடாது, சிங்கள தலைவர்களை நாங்கள் பகைக் கூடாது என்றுதான். எந்த சிங்களத் தலைவர் சிங்கள மக்களின் ஆதரவைக் கூடுதலாப் பெறுகின்றாரோ அவருக்கும் எங்களுக்கும் இடையில் ஒரு நட்புறவு எப்போதும் இருக்க வேண்டும். நாங்கள் இன்றைக்கும் ஒருதரையும் பகைக்கவில்லை. நாங்கள் பகைக்க மாட்டோம். பகைமை எங்களுக்கு வேண்டாம். ஆனால் எமது மக்களின் உரிமைகளில் தங்களுக்கு கடைசி வரையிலும் விட்டுக் கொடுக்கமாட்டோம் என்பதை எல்லோரும் புரிந்துகொள்ளவேண்டும்.

ஆனபடியால் எமது எதிர்கால நடவடிக்கைகள் சம்பந்தமான சிந்தனைகள் பற்றி நாங்கள் உங்களுக்கு கூறியிருக்கின்றோம். நாங்கள் பலமான இடத்தில் இருக்கின்றோம். உள்நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் நாங்கள் ஒப்புதல்களைப் பெற்றிருக்கிறோம். அந்த விடயங்கள் எழுத்தில் இருக்கின்றன. அவை நிறைவேற்றப்பட வேண்டும். அது தமிழ் மக்களைப் பாதுகாத்து தீர்வொன்றை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு சர்வதேச சமூகம் ஒத்துழைக்க வேண்டும் – என்றார். (ஐ–07)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## சர்வதேசத்தின் பதில் என்னவோ?

உலகெங்கனும் அரசியலில் மாண்புடையதாக எது மதிக்கப்படுகின்றதோ, அதுதான் இலங்கையின் எழுபது ஆண்டுகால – இனங்களுக்கு இடையிலான – பெரும் சீரழிவுக்குக் காரணமாக இருந்து வந்துள்ளது என்பது மீண்டும் உணரப்பட்டிருக்கின்றது.

ஜனநாயகம் என்ற பெயரில் நடக்கும் கேலிக் கூத்துத்தான் அது.

பெரும்பான்மையினரின் விருப்பே முடிவு, அதுவே தீர்வு, அதுவே தீர்ப்பு – என்ற ஜனநாயகத்தின் மோசமான பக்கமே இந்த இலங்கைத்தீவில் இனங்களுக்கு இடையிலான கொடூரமான முரண்பாட்டுக்கு மிக அடிப்படையான காரணம் என்பதை சர்வதேம் புரிந்து கொள்ளும் ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

அதனையே இப்பத்தியில் 'ஜனநாயகத்தின் கேலிக்கூத்து' என்று திரும்பத் திரும்பப் பல தடவைகள் சுட்டிக்காட்டி வந்துள்ளோம்.

உலகெங்கும் இதுவரை பின்பற்றப்பட்ட அரசியல் முறைமைகளில் மாண்புடையது, மேன்மைமிக்கது, மதிப்புயர்ந்தது என்று போற்றப்பட்ட – போற்றப்படுகின்ற – ஜனநாயக முறைமை இலங்கையில் இனங்களுக்கு இடையிலான சீரழிவுக்குப் பிரதான காரணமாகியிருப்பது ஏன்? இலங்கையில் மட்டும் ஏன் இந்த நிலைமை?

அதற்குக் காரணம் உண்டு. உலக அரசியல் ஆட்சி முறைகளில் ஜனநாயகம் மேலானதுதான். ஆனால் அதன் மகத்துவம் – மாண்பு – மேன்மையான தன்மை – வெறுமனே அதன் பண்பியல்புகளில் மட்டும் தங்கியில்லை. அந்தப் பண்பியல்பைப் பின்பற்றும் மக்கள் கூட்டத்திலும் அது தங்கியிருக்கின்றது என்பதற்கு இலங்கை நிலைமை நல்லதோர் உதாரணம்.

எழுபது ஆண்டுகளாக நீதி வேண்டி – நியாயம் வேண்டி – கௌரவ வாழ்வு வேண்டி – வரலாற்று ரீதியான, பிறப்பியல் ரீதியான உரிமைகளை நிலை நாட்ட வேண்டி – இலங்கைத் தமிழர்கள் நடத்திய போராட்டங்களை ஆயுத முனையில் அடக்கி, ஒடுக்கிய பௌத்த, சிங்களப் பேரினவாத மேன்மை, இப்போது தனது உண்மைச் சொரூபத்தை வெளிப்படையாகக் கூறிவிட்டது.

*"இந்த எழுபது ஆண்டுகளாக நீங்கள் அது, இது என்று பலவற்றைக் கேட்டுப் போராடினீர்கள். ஆனால் உங்களுக்கு ஏதும் தரப்பட்டதா? இல்லையே. இனி மேலும் தரப்படமாட்டாது. அதிகாரப்பகிர்வு, சுயாட்சி, சமஷ்டி என்று எதுவும் கேட்காதீர்கள். அபிவிருத்தி வேண்டும் என்றால் கேளுங்கள். அது மட்டும் தரலாம். இந்த இலங்கைத் தீவின் பெரும்பான்மை மக்களுக்கு விருப்பம் இல்லாத எதுவும் உங்களுக்குத் தரப்படமாட்டாது. அவை குறித்துப் பேசுவதில் அர்த்தம் இல்லை."* – என்று மிக வெளிப்படையாகவும், சந்தேகத்துக்கு இடமின்றித் தெளிவாகவும், அப்பட்டமாகவும் அறிவித்துவிட்டார் இலங்கையின் புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

தென்னிலங்கை பௌத்த சிங்கள மேலாதிக்கம் – பேரினவாதம் – தனது உண்மைச் சொரூபத்தைக் கடைசியாக உலகுக்கு வெளிப்படுத்தி விட்டது.

தமிழ் மக்கள் இனி செய்வது என்ன என்பது ஒருபுறமிருக்க, சர்வதேசம் என்ன சொல்லப் போகின்றது, செய்யப்போகின்றது என்பதுதான் கேள்வி.

தமது உரிமைகளைத் தாங்களே தேடிப் பெறுவதற்காகத் தங்கள் உயிர்களையும், உறவுகளையும், உடைமைகளையும் பணயம் வைத்து, ஒரு தியாகப் பெருவேள்வியை ஆயுதப் போராட்டமாகத் தமிழர்கள் முன்னெடுத்தபோது –

ஆயுதங்களையும், பயங்கரவாதப் போக்கையும் கைவிட்டு வாருங்கள், நீதி செய்யப்படும் என்று எமக்குப் போதித்தவைதான் இணைத் தலைமை நாடுகள், இந்தியா மற்றும் சர்வதேச நாடுகள்.

இதே விளக்கம், வியாக்கியானத்தை முன்னிறுத்தித்தான் தமிழ்களின் விடுதலைப் போராட்டத்துக்கு எதிரான 'அரச பயங்கரவாதத்துக்கும்' அவை முண்டுகொடுத்து, அதே பயங்கரவாதப் பாணியில் தமிழினத்தவர்களோடு சேர்ந்து அவர்களின் விடுதலைப் போராட்டமும் அழித்தொழிக்கப்படும் அடாவடியிலும் பங்காளிகளாகின உலக நாடுகள்.

யுத்தத்தின் பெயரால் தமிழினத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட யுத்தக் குற்றங்களுக்கு நீதி, நியாயமான விசாரணை கோரி, சர்வதேசத் தீர்மானத்தை எட்ட வைத்த உலக நாடுகள், அந்த விடயத்தில் இப்போது வாயைப் பிளந்து, வகைசெய்யும் வழிஏதுமின்றி ஏமாளிகளாக நிற்கின்றன.

இப்போதும் *"இலங்கையின் புதிய ஜனாதிபதி கூறுவது வாஸ்தவம் தான். நாட்டின் பெரும்பான்மை மக்கள் விரும்பாத எதையும் சிறுபான்மையினருக்கு வழங்குவது எங்ஙனம்? ஆகவே தரும் அபிவிருத்தியை மட்டும் வாங்கிக் கொண்டு வாயடைத்து அடங்குங்கள்!"* – என்று எமக்குப் போதிக்கப் போகின்றனவா இந்தியா மற்றும் அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே உள்ளிட்ட சர்வதேச சமூகம்?

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் துப்பாக்கிகள், ஷெல்கள், பீரங்கிகள் போன்றவற்றின் சுடுகுழல்கள் எப்போது சூடாகிக் கனன்று கொண்டிருந்தனவோ அப்போது எமது போராட்டத்தின் நியாயம் சர்வதேசத்தின் காதுகளில் தெளிவாக வீழ்ந்தது. தென்னிலங்கையின் மூளையில் உரமாக உறைத்தது.

'உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தீர்வு' என்று சர்வதேச சமூகத்தின் முன்னால் தென்னிலங்கைப் பேரினவாதமே எழுந்து அடங்கி நின்று பவ்வியமாகப் பிரேரிக்கும் நிலைமை வந்தது அதனால்தான்.

இப்போது அந்த சுடுகுழல்களும் அடங்கி விட்டன. சர்வதேசத்தின் நீதிப் பார்வையும் தூங்கிச் சுருண்டு நீண்டகாலமாகி விட்டது. தென்னிலங்கையின் மிதப்பும் உச்சமாகி விட்டது.

எது, எப்படியோ தென்னிலங்கையின் எதேச்சதிகார மிதப்பும் போக்கும், மேலாதிக்கத் திமிர்த்தனமும், சர்வதேச சமூகத்தின் செயல்திறனின்மையும், தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தின் பின்னால் பொதிந்து கிடக்கும் நியாயத்தை இப்போதும் உறுதிப்படுத்துகின்றன என்பது மட்டும் உண்மை.

# பேரனாரான ஆனந்தசங்கரியுடன் மல்லுக்கட்ட நான் விரும்பவில்லை

## கூறுகின்றார் சுமந்திரன் எம்.பி.



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெ. 19

வரலாற்றைத் தவறாக ஆனந்தசங்கரி ஐயா சொன்னபோது அதனை நான் திருத்தியமையால் அவருக்கு என் மீது கோபம் இருக்கிறது. அவர் எனது பேரனார். வயது முதிர்ந்தவர். அவருக்கு ஞாபக மறதி ஏற்படுவதெல்லாம் சகஜம். ஆனபடியால் அவருடன் மல்லுக்கட்ட நான் விரும்பவில்லை.

– இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்தினர்.

சுமந்திரனுக்கு வரலாறு தெரியாது என ஆனந்தசங்கரி அண்மையில் தெரிவித்த கருத்து தொடர்பில் கேள்வி எழுப்பியபோதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எதிராகக் கடந்த 2003 ஆம் ஆண்டு வைத்த வழக்கில் அவர் சாட்சியாகச் சாட்சியம் கொடுத்தபோது அவரை நான் குறுக்கு விசாரணை செய்திருந்தேன். அதன்போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரகள் யார் என்று ஆரம்பத்தில் நான் கேட்டிருந்தேன்.

அதற்கு அவர் இரண்டு பேர் என்று சொலியிருந்தார். அவர் சொன்ன வரலாற்றுத் தவறை திருத்தி அவருக்கு ஞாபகப்படுத்தி மூன்று தலைவர்கள் என்று நான் சொல்லியிருந்தேன். அவ்வாறு அவர் சொன்ன வரலாற்றுத் தவறை நான் திருத்தியமை பதிவில் இருக்கிறது. அந்தக் கோபமும் அவருக்கு இருக்கின்றது.

அது இன்னும் விட்டுப் போகாததுதான் சுமந்திரன் வரலாறு தெரியாதவர் என்று அவர் சொல்வதற்குக் காரணம். அவர் என்னுடைய பேரன் முறையானவர். மிகவும் வயது முதிர்ந்தவர். அவருடன் மல்லுக் கட்டுவதற்கு நான் விரும்பவில்லை. அவருக்கு ஞாபக மறதி ஏற்படுவதெல்லாம் சகஜம்.

தவறான வரலாற்றைச் சொல்லியமையை ஞாபகப்படுத்தி அவரைத் திருத்தியமை அவருக்கு இன்னமும் கஷ்டமாக இருக்கிறது. அதாவது தான் தவறாகச் சொல்லிவிட்டேன், நான் அவரைத் திருத்தி விட்டேன் என்பது அவருக்குக் கஷ்டமாக உள்ளது. அதனால் அவர் எனக்கு வரலாறு தெரியாது என்கிறார். ஆனாலும் அவருடைய கருத்துக்களுக்கு எல்லாம் நான் பதில் சொல்லிக் கொண்டிருக்க விரும்பவில்லை – என்றார். (ஐ)

# இந்தியாவில் உள்ள ஈழத் தமிழர் தாயகத்துக்கு திரும்பவேண்டும்

## கூட்டமைப்பு வலியுறுத்து

யாழ்ப்பாணம், டிசெ. 19

இந்தியாவில் உள்ள ஈழ அகதிகள் அனைவரும் இந்த நாட்டில் இருந்து துரத்தப்பட்டவர்கள். அவர்கள் இங்கே மீண்டும் வந்து மீள்குடியமர வேண்டும் எனத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்தியாவில் நிறைவேற்றும் சட்டம் எப்படி இருக்கவேண்டும் என நான் கருத்து கூறமுடியாது. அது இந்தியா தனது நலன் கருதி கொண்டு வரும் சட்டங்கள்.

இங்கிருந்து சென்றவர்கள் மீண்டும் இங்கே வரவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. இந்தியாவில் தொடர்ந்து அவர்கள் தங்கியிருக்க வேண்டும் எனும் நிலைப்பாடு அவர்களுக்கு இருந்தால் சர்வதேச சட்டத்தின் கீழ் அதனைச் சுயாதீனமாகத் தெரிவு செய்யும் உரிமை அவர்களிடம் உண்டு.

எங்களின் விருப்பம் என்னவெனில் அவர்கள் அனைவரும் இலங்கையர்கள். இந்த நாட்டில் இருந்து துரத்தப்பட்டவர்கள். அவர்கள் இங்கே மீண்டும் வந்து குடியமரவேண்டும்.

குடியமர வந்தவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. நாங்கள் ஆதரவு தெரிவித்த அரசுகூட அதனைச் செய்ய தவறி இருந்தது. ஆனாலும் அவர்களுக்கான உதவிகளைச் செய்வதற்குப் பல முயற்சிகளை நாங்கள் முன்னெடுத்திருந்தோம்.

நாடு திரும்புவர்கள் வாழ்வதற்கான வசதிகளை மாத்திரம் செய்து கொடுக்காது அவர்களின் வாழ்வாதாரத்திற்கும் உதவிகளைச் செய்வதற்கு தொடர்ந்தும் நாங்கள் வலியுறுத்துவோம் – என்றார். (ஐ)

# ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவின் அபிவிருத்திக்கும் தலா 50 லட்சம் ரூபா

நாடு முழுவதும் உள்ள ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் தலா 50 லட்சம் ரூபா அபிவிருத்தித் திட்டங்களை ஜனவரி மாதத்துக்குப் பின் ஆரம்பிக்க அரசு திட்டமிட்டுள்ளது.

இதற்கான அறிவுறுத்தல்கள் பிரதேச செயலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இந்தத் தகவலை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபயவர்த்தன தெரிவித்தார்.

நேற்று முன்தினம் அமைச்சில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இந்தத் தகவலைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாடு முழுவதும் உள்ள ஒவ்வொரு கிராம அலுவலகர் பிரிவிலும் தலா 50 இலட்சம் ரூபா அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. அதில் முதல் கட்டமாக 20 லட்சம் ரூபா மதிப்பீட்டிலான வேலைத் திட்டங்களை ஆரம்பிக்குமாறு பிரதேச செயலருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த கிராம அலுவலர் பிரிவில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. கிராம அலுவலர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், கமநல சேவை அலுவலர் மற்றும் அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதி ஆகியோர் இந்தக் குழுவில் அடங்குவார்கள் – என்றார். (ஐ)

## நாளை 20.12.2019 – வெள்ளிக்கிழமை

திதி : நவமி மு.இ 8.02 வரை
நட்சத்திரம்: அத்தம் மு.இ 10.12 வரை
இராகுகாலம் : 10.54 – 12.24
சுப நேரம் : 6.24 – 7.54

காலைக்கதிர் Kalaikathir



# எவ்வளவு அடிச்சாலும் தாங்குறாண்டா என்ற வடிவேலுவின் காமடி நிலையில் நித்தியானந்தா

## அவரே அதை விசனத்துடன் வெளிப்படுத்துகிறார்

சென்னை,டிசெ.19

'எவ்வளவு அடிச்சாலும் தாங்குறாண்டா' என்ற வடிவேலு காமெடியைப் போல் எனது நிலை ஆகிவிட்டது. ஊடகங்கள் முழு நேரமும் என்னை பற்றித்தான் பேசிவருகின்றன என சுவாமி நித்யானந்தா கூறினார்.

கைலாசா என்ற பெயரில் தனி நாடு அமைக்கப்போவதாக ஆரம்பித்த நித்யானந்தா காமெடி தற்போது உச்சத்தைத் தொட்டுள்ளது. நெட்டிசன்கள் அவரைக் கிண்டல் செய்து மீம்ஸ்களை வெளியிட்டு வருகிறார்கள். 'மீம்ஸ் போடும் மாம்ஸ்களா! உங்கள் மீம்ஸ்களால்தான் கைலாசா பிரபலமானது!' – என அதையும் தனக்குச் சாதகமாக்கிப் பேசி வருகிறார் நித்யானந்தா.

உலகில் எங்கோ இருந்தபடி நித்யானந்தா தினசரி உபதேசங்களை வாரி வழங்கிக் கொண்டிருக்கிறார்.

இந்நிலையில், வழக்கம் போல் சமூகவலைதளத்தில் தோன்றி சொற்பொழிவாற்றிய நித்யானந்தா –

முன்பெல்லாம் நாட்டில் ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டால்



தான் அதனைத் திசை திருப்ப எம்மை பற்றிய செய்திகள் உலாவும், ஆனால் தற்போது ஏதாவது பெரிய பிரச்சினை வரும்போது தவிர்த்து மற்ற நேரங்களிலெல்லாம் முழு நேரமும் எம்மை பற்றித்தான் ஊடகங்கள் பேசிக்கொண்டிருக்கின்றன. 'எவ்வளவு அடிச்சாலும் தாங்குறான்' என்கிற வடிவேலு காமெடியைப் போல் எனது நிலை ஆகிவிட்டது.

2003 ஆம் ஆண்டு முதல் நான் சந்திக்காத குற்றப்பிரிவுகளே இல்லை, என் மீது சுமத்தப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுகளிலும் நான் நிரபராதி என்று நிரூபித்துள்ளேன்.

நான் செய்ய வேண்டிய என்னுடைய ஆன்மீகக் கடமையைத் தொடர்ந்து எவ்வளவு தடை வந்தாலும் செய்து கொண்டே இருக்கிறேன், இதனால் தமிழர்கள் என்னை ஆன்மீக ரீதியாக எப்போதோ தலைவர் என்று ஏற்றுக் கொண்டுவிட்டார்கள்.

கைலாசா நாடு அமைக்கும் திட்டத்தால் எனக்கு அடிதான் விழும் என்று நினைத்தேன். ஆனால் அதற்கு மாறாக ஆதரவு பெருகி வருகிறது.

கைலாசாவில் குடியுரிமை கோரி 40 லட்சம் பேர் விண்ணப்பித்திருக்கிறார்கள், கைலாசா நாட்டை உருவாக்குவேன். இதை செய்து முடித்தே தீருவேன். இதில் எந்த ஒரு சமரசமும் கிடையாது. செய்ய முடியுமா? முடியாதா? என்ற பஞ்சாயத்து வந்தால் இப்போதே சொல்லிவிட்டேன், அந்த கடவுளின் அருளால் நான் செய்ய வேண்டிய திருப்பணியாக திருகைலாசத்தை செய்தே தீருவேன், செய்துவிட்டேன், நேரம் வரும்போது இதை அறிவிப்பேன், பஞ்சாயத்து முடிந்துவிட்டது. கிளம்பலாம் . – என்று கூறி முடித்தார்.

# காஷ்மீர் தொடர்பாக ஐ.நா. பாதுகாப்புக் கவுன்ஸிலில் விவாதிக்கும் கோரிக்கையைத் திரும்பப் பெற்றது சீனா

## இந்தியாவின் இராஜதந்திர நடவடிக்கைகளை அடுத்தே வாபஸ்



ஜெனீவா,டிசெ.19

காஷ்மீர் விவகாரம் தொடர்பாக ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலில் ஆலோசிக்க வேண்டும் என்று தான் விடுத்த கோரிக்கையை சீனா திரும்ப பெற்றதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கும் சட்டப்பிரிவு 370ஐ கடந்த ஓகஸ்ட் 5 ஆம் திகதி மத்திய அரசு ரத்து செய்தது. ஜம்மு காஷ்மீர் மாநிலத்தை இரண்டு யூனியன் பிரதேசங்களாகவும் மத்திய அரசு பிரித்தது. இந்தியாவின் இந்த நடவடிக்கைக்குக் கடும் எதிர்ப்பு தெரிவித்த பாகிஸ்தான், காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக சர்வதேச நாடுகளை நாடியது. ஆனால், சீனாவைத் தவிர பாகிஸ்தானுக்கு எந்த நாடும் சொல்லிக்கொள்ளும்படி இந்த விஷயத்தில் ஆதரவு அளிக்கவில்லை.

இந்தநிலையில், ஜம்மு காஷ்மீரின் தற்போதைய நிலைவரம் தொடர்பாக ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலில் விவாதிக்கவேண்டும் என்று சீனா கோரிக்கை விடுத்ததாகவும் இதன்படி, செவ்வாய்க்கிழமை காஷ்மீர் விவகாரம் தொடர்பாக 2 அஆவது முறையாக இரகசிய ஆலோசனை நடத்தப்பட இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகி இருந்தன.

ஆனால், ஐக்கிய நாடுகள் அவையின் 15 உறுப்புகள் நாடுகளுடன் (5 நிரந்தர உறுப்பு நாடுகள், 10 தற்காலிக உறுப்பு நாடுகள்) இந்தியத் தூதரகம் தீவிர ஆலோசனை நடத்தியது. இதன் பயனாக சீனா விடுத்த கோரிக்கை வாபஸ் பெறப்பட்டுள்ளதாக செய்தி வெளியானது.

கடந்த 12 ஆம் திகதி, காஷ்மீரில் மேலும் பதற்றங்களுக்கு சாத்தியம் இருப்பதாக ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸ்லுக்குப் பாகிஸ்தான் வெளியுறவுத்துறை மந்திரி ஷா முகம்மது குரோஷி கவலை தெரிவித்துக் கடிதம் எழுதியிருந்தார்.

# வேகமாக பஸ்களைச் செலுத்தும் சாரதிகளுக்கு தோப்புக்கரணம் போட வைக்கும் தண்டனை!

## அதுவும் பஸ்களின் மேலே ஏற்றிப் பகிரங்கமாக



இந்தூர்,டிசெ.19

பஸ்ஸை அதிவேகமாக இயக்கியமைக்காக சாரதிகளை பஸ்ஸின் மேல் ஏறி நின்று தோப்புக்கரணம் போடச்செய்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

மத்திய பிரதேச மாநிலம் இந்தூரிலிருந்து மோவ், மன்பூர் மற்றும் பிதாம்பூர் வரை பஸ்களை இயக்கும் சில சாரதிகள் அவற்றை அதிவேகமாக இயக்குகின்றனர் எனவும், நெரிசலான இடங்களில் அதிவேகமாக செலித்துகின்றனர் எனவும் ராவ் நகர் குடியிருப்பு வாசிகள் குற்றம்சாட்டினர். மேலும் பஸ்களை இயக்கும் சாரதிகள் பாதசாரிகளைக் கவனிப்பதில்லை என்றும் குறை கூறினர்.

இது தொடர்பாக நகராட்சி தலைவர் சிவ்னாராயணிடம் மக்கள் முறைப்பாடு அளித்தனர். சாரதிகளுக்கு நூதன தண்டனை வழங்க முடிவு செய்த அப்பகுதி வாசிகள், நகராட்சி தலைவரின் ஆலோசனையின் பேரில் அதிவேகமாக இயக்கிய பஸ்களின் சாரதிகளைப் பிடித்து, பஸ்ஸின் மீது ஏற்றித் தோப்புக்கரணம் போடச் செய்தனர். பொதுமக்கள் கூடி நிற்க சாலையின் நடுவே நடைபெற்ற இந்தச் சம்பவம் சமூக வலைதளங்களில் வேகமாக பரவி வருகிறது.

# பாரதீய ஜனதா - சிவசேனா எம்.எல்.ஏ.க்கள் மராட்டிய சட்டசபையில் குடுமிப்பிடிச் சண்டை



நாக்பூர்,டிசெ.19

மராட்டிய சட்டசபையில் பாரதீய ஜனதா – சிவசேனா எம்.எல்.ஏ.க்கள் இடையே மோதல் ஏற்பட்டது. ஒருவருக்கொருவர் சட்டைக் கொலரைப் பிடித்துச் சண்டை போட்டமையால் பரபரப்பு ஏற்பட்டது.

மராட்டிய சட்டசபையின் குளிர்காலக் கூட்டத்தொடர் நாக்பூரில் நடந்து வருகிறது. கூட்டத்தொடரின் 2 ஆவது நாளான நேற்று முன்தினம் மாநிலத்தில் மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ.25 ஆயிரம் நிவாரணம் வழங்கக்கோரி பாரதீய ஜனதா உறுப்பினர்கள் சட்டசபையின் மையப்பகுதிக்கு சென்று அமளியில் ஈடுபட்டனர்.

முந்தைய ஆட்சியின் போது, இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி சிவசேனாவின் அதிகாரப்பூர்வ நாளேடான 'சாம்னா'வின் தலையங்கத்தில் பிரசுரிக்கப்பட்டு இருந்த செய்தி அடங்கிய பதாகையை பாரதீய ஜனதா எம்.எல்.ஏ. அபிமன்யு பவார் முதலமைச்சர் உத்தவ் தாக்கரேயிடம் நெருங்கிச் சென்று காட்ட முயன்றார்.

இதைக் கவனித்த சிவசேனா எம்.எல்.ஏ. சஞ்சய் கெய்க்வாட் அந்தப் பதாகையை அவரது கையில் இருந்து பறிக்க முயன்றார். இதில் இருவருக்கும் இடையே சட்டசபையில் மோதல் உண்டானது. ஒருவருக்கொருவர் சட்டைக் கொலரை பிடித்துக்கொண்டு தள்ளுமுள்ளுப்பட்டனர்.

முதலமைச்சர் உத்தவ் தாக்கரேயின் முன்னாலேயே எம்.எல்.ஏ.க்கள் இருவரும் மோதிக்கொண்டமையால் சபையில் பரபரப்பு உண்டானது. உடனே சிவசேனா மந்திரிகளும், பாரதீய ஜனதாவைச் சேர்ந்த முன்னாள் மந்திரிகளும் இருவரின் சண்டையை விலக்கி விட்டனர். அந்த நேரத்தில் பாரதீய ஜனதா எம்.எல்.ஏயிடம் இருந்த பதாகையை சிவசேனா எம்.எல்.ஏ.க்கள் சிலர் பறிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

இதனால் அமளி தொடரவே சபையை 30 நிமிடத்துக்கு சபாநாயகர் ஒத்திவைத்தார். பின்னர் மீண்டும் சட்டசபை கூடியபோதும் அமளி நீடித்ததால் சபையை நாள் முழுவதும் சபாநாயகர் நானா பட்டோலே ஒத்திவைத்தார்.

கடந்த முறை ஆளும் கூட்டணிக் கட்சிகளாக இருந்து நடந்து முடிந்த சட்டசபைத் தேர்தலை ஒரே கூட்டணியாக எதிர்கொண்ட இந்த இரு கட்சிகளும் இப்போது எதிர்த் துருவங்களாக மாறிச் சண்டையில் ஈடுபட்டமை பரபரப்பை ஏற்படுத்தியது.

# சிரியாவில் மோசமான வான்வழி தாக்குதலில் 23 சிவிலியன்கள் பலி; 30 பேருக்குக் காயம்



பெய்ரூட்,டிசெ.19

சிரியாவில் நடத்தப்பட்ட வான்வழி தாக்குதலில் பொதுமக்களில் 23 பேர் பலியாகி உள்ளனர் என அறிவிக்கப்படுகிறது.

சிரியாவில் கடந்த 2011ஆம் ஆண்டு மார்ச்சில் இருந்து கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக அரசு நடத்தி வரும் போரில் இதுவரை 3 லட்சத்து 70 ஆயிரத்திற்கும் கூடுதலான மக்கள் பலியாகி உள்ளனர். லட்சக்கணக்கான மக்கள் தங்களது வீடுகளை விட்டு வேறு இடங்களைத் தேடி தஞ்சம் புகுந்தனர்.

சிரியாவின் இத்லிப் பகுதியில் அல் கொய்தா தீவிரவாத இயக்கத்துடன் தொடர்புடைய போராளிக் குழுக்கள் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. எனினும், இந்தப் பகுதியை தங்களது கட்டுக்குள் கொண்டு வருவோம் என சிரிய அரசு தொடர்ந்து உறுதி கூறி வருகிறது.

இப்பகுதியில் கடந்த ஏப்ரலில் நடந்த அரசு ஆதரவு படைகளின் தாக்குதலில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடிமக்கள் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலை அடுத்து 4 லட்சத்திற்கும் கூடுதலான மக்கள் தங்களது வீடுகளை விட்டு விட்டு இடம் பெயர்ந்து சென்றனர்.

அரசுப் படைகளின் தாக்குதலை தவிர்க்கும் வகையில் ரஷ்யா கடந்த ஒகஸ்டு இறுதியில் போர்நிறுத்த ஒப்பந்தம் செய்தது. ஆனால், இந்த ஒப்பந்தத்திற்கு பின்னரும் தொடர்ந்து தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. இதில் 250 பேர் வரை பலியாகி உள்ளனர்.

இந்நிலையில், இங்கிலாந்து நாட்டை அடிப்படையாக கொண்ட சிரிய மனித உரிமைகள் கண்காணிப்பகம் வெளியிட்டுள்ள செய்தியில், அரசு படைகள் நடத்திய வான்வழி தாக்குதலில் பொதுமக்களில் 23 பேர் பலியாகி உள்ளனர். 30 பேர் காயமடைந்தனர் என தெரிவித்து உள்ளது. அவர்களில் தல்மனாஸ் கிராம பகுதியில் ஒரே குடும்பத்தினை சேர்ந்த 7 உறுப்பினர்கள் மற்றும் படாமா கிராமத்தில் ஒரு பெண் மற்றும் அவரது 3 குழந்தைகள் உள்ளிட்டோரும் அடங்குவர்.

## டிரம்புக்கு எதிரான குற்ற விசாரணைக்கு பிரேரணை பிரதிநிதி சபையில் தாக்கல்



அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் நற்று அதிபர் டிரம்ப்புக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணை தாக்கல் செய்யப்பட இருந்தது.

இந்நிலையில் சபாநாயகர் நான்சி பெலோசிக்கு டிரம்ப் எழுதிய நீண்ட கடிதத்தில் தம்மை கூட்டுச் சதிக்கு ஆளானவர் என்று விளக்கம் அளித்துள்ளார்.

ஜனநாயக கட்சியின் அதிபர் வேட்பாளராக போட்டியிட உள்ள ஜோ பிடனின் மகனுக்கு உக்ரைன் எரிவாயு நிறுவனத்தில் உள்ள வர்த்தகத் தொடர்பு குறித்து விசாரணை நடத்துமாறு உக்ரைன் அரசிடம் டிரம்ப் கேட்டுக் கொண்டார் எனக் கூறப்படுகிறது. இதன் மூலம் அமெரிக்க அரசமைப்புச் சட்டம், தேசிய பாதுகாப்பு, அதிபர் தேர்தலுக்கான நம்பகத்தன்மை உள்ளிட்டவற்றுக்கு டிரம்ப் ஆபத்து விளைவித்து விட்டார் என்று ஜனநாயகக் கட்சி குற்றம் சாட்டியது.

இதை அடுத்து டிரம்ப்பை பதவியை விட்டு நீக்க திட்டமிட்டு, முதல்கட்டமாக பிரதிநிதிகள் சபையில் நேற்றுக் கண்டனத் தீர்மானம் தாக்கல் செய்யப்படவிருந்தது. பிரதிநிதிகள் சபையில் ஜனநாயகக் கட்சிக்கு 236 பேர் உள்ளனர். டிரம்பின் குடியரசுக் கட்சிக்கு 197 பேர் மட்டுமே உள்ளனர், எனவே கண்டனத் தீர்மானம் அங்கு நிறைவேறுவது உறுதியாகி உள்ளது. கண்டனத் தீர்மானம் செனட் சபையிலும் நிறைவேறினால் மட்டுமே, அதிபர் டிரம்பைப் பதவியில் இருந்து நீக்க முடியும்.

ஆனால் 100 இடங்களைக் கொண்ட செனட் சபையில் டிரம்பின் குடியரசுக் கட்சிக்கு 53 உறுப்பினர்களுடன் பெரும்பான்மை இருப்பதால் கண்டனத் தீர்மானம் அங்கு தோற்கடிக்கப்பட்டு, டிரம்பின் பதவி காப்பாற்றப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம். இந்நிலையில் சபாநயகருக்கு எழுதிய கடிதத்தில் இந்த பிரேரணை எந்தச் சட்டத்தின் கீழும் அடங்காது என்று குறிப்பிட்டுள்ள டிரம்ப், இதில் எந்த விதமான குற்றமும் இல்லை என்றும் சாடியுள்ளார்.

இது அமெரிக்க ஜனநாயகத்தின் மீதான வெளிப்படையான யுத்தம் என்றும் எதிர்க்கட்சியினர் மீது டிரம்ப் தாக்குதல் தொடுத்துள்ளார். அதிகாரத்தைத் தாம் தவறாகப் பயன்படுத்தவில்லை என்று கூறியுள்ள டிரம்ப் வரலாறு உங்கள் தவறான நடவடிக்கையைக் கடுமையாக கண்டனம் செய்யும் என்று குறிப்பிட்டுள்ளார்.

## மூன்றரை கி.மீ. தூரம் நகர்த்தப்பட்ட 600 ஆண்டுகள் பழமையான மசூதி!



அங்காரா,டிசெ.19

துருக்கியில் 609 ஆண்டுகள் பழமையான மசூதி மூன்றரைக் கிலோ மீற்றர் தொலைவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டது.

துருக்கியின் தெற்கு பகுதியில் பாட்மான் மாகாணத்தில் உள்ள பழமையான நகரம் ஹசன்கீப். இங்கு அந்த நாட்டின் கட்டடக்கலையைப் பறைசாற்றும் வகையில் வரலாற்று சிறப்பு மிக்க கட்டடங்கள் ஏராளமாக உள்ளன.

இந்த நிலையில் ஹசன்கீப் நகரில் உள்ள டைக்ரிஸ் ஆற்றுக்கு அருகே லிசு என்ற பிரமாண்ட அணை கட்டப்பட்டு வருகிறது. கட்டுமான பணிகள் முடிவடைந்ததும் டைக்ரிஸ் ஆற்றில் இருந்து லிசு அணைக்கு தண்ணீர் திருப்பிவிடப்படும்.

அப்படித் தண்ணீரைத் திருப்பிவிடும்போது, ஹசன்கீப் நகரில் உள்ள கட்டடங்கள் நீரில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டு உள்ளது. எனவே அங்கு உள்ள வரலாற்றுச் சின்னங்கள் அனைத்தும் படிப்படியாக அருகில் உள்ள பகுதிகளுக்கு மாற்றப்படுகின்றன.

அந்த வகையில் ஹசன்கீப் நகரில் உள்ள 609 ஆண்டுகள் பழமையான எரி ரிஸ்க் என்ற மசூதி பெயர்த்து எடுக்கப்பட்டு வாகனம் மூலம் மூன்றரைக் கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ஹசன்கீப் கலாசாரப் பூங்காவுக்குக் கொண்டு செல்லப்பட்டது. 1,700 தொன் எடை கொண்ட எரி ரிஸ்க் மசூதியின் மேல் பகுதி தனியாகவும், கீழ் பகுதி தனியாகவும் பிரிக்கப்பட்டு 2 தனித்தனி வாகனங்களில் கொண்டு செல்லப்பட்டது.

## ‘737 மக்ஸ்’ ரக விமானத் தயாரிப்பை நிறுத்த போயிங் நிறுவனம் தீர்மானம்

வொஷிங்டன்,டிசெ.19

’மக்ஸ்’ ரக விமான தயாரிப்பினை நிறுத்த உள்ளதாக போயிங் நிறுவனம் அறிவித்துள்ளது. அமெரிக்காவை சேர்ந்த பிரபல விமான தயாரிப்பு நிறுவனமான ‘போயிங்’ தயாரித்த ‘737 மக்ஸ்’ ரக விமானங்கள் 5 மாத இடைவெளியில் இந்தோனேசியா மற்றும் எத்தியோப்பியாவில் அடுத்தடுத்து விபத்துக்குள்ளாகின. இந்த இரு விபத்துகளிலும் 346 பேர் பலியாகினர். அந்த விமானங்களில் பயணம் செய்த ஒருவர் கூட உயிர் பிழைக்கவில்லை.

அடுத்தடுத்து நிகழ்ந்த விபத்துகளால் விமானத்தின் பாதுகாப்புக் குறித்து கேள்வி எழுந்தது. இது தொடர்பான விசாரணையில் விமானத்தின் புதிய தொழில்நுட்ப அம்சத்தில் பழுது இருப்பது கண்டறியப்பட்டது. அதனை தொடர்ந்து, உலக நாடுகள் அனைத்தும் ‘737 மக்ஸ்’ விமானங்களை இயக்க தற்காலிக தடைவிதித்தன.

இந்த ஆண்டின் இறுதிக்குள் இந்த தடையை நீக்கி, ‘737 மக்ஸ்’ விமானங்களை மீண்டும் பயன்பாட்டுக்கு கொண்டு வந்துவிடலாம் என ‘போயிங்’ நிறுவனம் நம்பியது. ஆனால் 2020இற்கு முன்னர் ‘737 மக்ஸ்’ விமானங்களை விமானங்கள் சேவைக்கு திரும்புவதை அங்கீகரிக்க முடியாது என்று அமெரிக்க போக்குவரத்துக் கழகம் கூறிவிட்டது.

இந்த நிலையில் வரும் ஜனவரி மாதம் முதல் சர்ச்சைக்குரிய ‘737 மக்ஸ்’ விமானங்களின் தயாரிப்பு தற்காலிகமாக நிறுத்தப்படும் என ‘போயிங்’ நிறுவனம் அறிவித்துள்ளது. நாங்கள் எதிர்பார்த்ததை விட நெருக்கடியில் இருந்து நிறுவனத்தை மீட்க நீண்ட காலம் ஆகும் என்பதாலும், போயிங்கின் நிலைத்தன்மை மீது சந்தேகம் உருவாவதால், முதலீட்டாளர்கள் இடையே இது கடும் அச்சத்தை ஏற்படுத்தும் என்பதாலும் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.



காலைக்கதிர்
Kalaikathir



# தமிழர்கள் இங்கு வந்தேறு குடிகளே! அடித்துக் கூறுகிறார் மேர்வின் சில்வா

இலங்கையைப் பூர்வீகமாக கொண்ட தமிழர்கள் யாருமில்லை. அனைவரும் வெளியில் இருந்தே வந்தார்கள். முஸ்லிம்களும் இங்கிருக்கவில்லை. சிங்கள, பௌத்தர்கள் மாத்திரமே இங்கு வாழ்ந்தார்கள் – என முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கை பௌத்த நாடு அல்ல என வட மாகாண முன்னாள் முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்திருந்தார். அவரின் கருத்துக்களுக்கு தென்னிலங்கையில் கடும் எதிர்ப்பு கிளம்பியது.

இந்நிலையில், முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா கடுமையான கண்டனங்களை வெளியிட்டுள்ளமையுடன், விக்னேஸ்வரனுக்கு அடிப்படை வரலாறோ அல்லது அறிவோ தெரியாது என்றும் காட்டமாகப் பேசியிருக்கிறார்.

இது தொடர்பில் மேர்வின் சில்வா கூறியவை வருமாறு :-

இலங்கையின் வரலாறு தெரியாமல் வட மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் நாட்டில் வாழ்கிறார். விக்னேஸ்வரனுக்கு இலங்கை வரலாறு மட்டுமின்றி அவர் உலக வரலாற்றைக் கூட தெரியாமல் இருக்கின்றார், நாட்டின் சமூகம் மற்றும் கலாசார அறிவும் அவருக்கு இல்லை.

இன்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இலங்கையில் சிங்களம் பேசும் மக்கள் வாழ்ந்து வந்தார்கள் எனவும், உலகத்தில் ஏனைய இனத்தவர் ஆடை அணிவதற்கு முன்னர் இலங்கை சிங்களவர் ஆடை அணிந்தனர் என்று குறிப்பிட்டு இருக்கின்றனர்.

எமக்குச் சிங்களம் என ஒரு மொழி இருந்தது. இயக்கர், நாகர், தேவர், ராக்ஷர் என நான்கு இனத்தவர்கள் இலங்கையில் வாழ்ந்தார்கள். இலங்கைச் சிங்களவர்கள் இராவணனின் காலத்தில் இருந்து வாழ்கிறார்கள். புத்த பகவான் தோன்றுவதற்கு முன்னர் இருந்தே இலங்கையில் சிங்களவர்கள் இருந்தார்கள் என வரலாறு கூறுகிறது.

இயக்கர்கள் எனப்படுபவர்கள் இராவணனின் பரம்பரையினர். விஜயன் என்பது சிங்கபாகு மற்



றும் சிங்கசீவலியின் மூத்த மகன். விஜயன் இலங்கைக்கு வருகை தந்து இயக்கர் (அரக்கர்) இனத்தை சார்ந்த குவேனி என்னும் இலங்கைப் பெண்ணை திருமணம் செய்கிறான். அதுவே வரலாறு.

அப்படியானால் இவர்கள் எப்படி இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு அல்ல என கூறுவார்கள்? இந்த நாட்டில் வாழும் முஸ்லிம்கள்தான் எமது பழைய உறவினர்கள். தமிழர்கள் இலங்கையை ஆக்கிரமித்தவர்கள். ஆக்கிரமித்து, வந்தவர்களைக் கொன்று குவித்தார்கள், விரட் டியடித்தார்.

அதேபோலஎமதுநாட்டின் மன்னர்கள் முன் மண்டியிட்டவர்களை இங்கு வைத்துக் கொண்டார்கள். சிலர் இந்தியாவில் இருந்து அடிமைகளாகத் தொழில் செய்ய வந்தார்கள். நான் கூறுவது மலையகத்தில் தேயிலை பறிக்கும் சகோதர தமிழினத்தவர்களை அல்ல. அவர்கள் எமது நாட்டின் அபிவிருத்திக்கு முதுகெலும்பாக இருந்து பாடுபடுபவர்கள். அவர்களை நான் எனது தலைக்குமேல் கைகூப்பி வணங்குகிறேன். அவ்வளவு புனிதமானவர்கள் அந்த மக்கள்.

எனவே விக்னேஸ்வரன் கூறுவது போல இலங்கையைப் பூர்வீகமாக கொண்ட தமிழர்கள் யாரு



**விக்னேஸ்வரனுக்கு அடிப்படை அறிவுதன்னும் இல்லை. இப்படி சீற்றத்துடன் கடுமையாக தாக்குகின்றார் அவர்**

மில்லை. அனைவரும் வெளியில் இருந்தே வந்தார்கள். முஸ்லிம்களும் இங்கிருக்கவில்லை. சிங்கள, பௌத்தர்கள் மாத்திரமே இங்கு வாழ்ந்தார்கள். புத்த பகவானே கூறியிருக்கிறார் உலகிலே 5000 ஆம் ஆண்டுகளுக்கு இலங்கையில் மாத்திரமே பௌத்த மதம் நிலைத்து நிற்கும் என்று.

ஒரு பௌத்தன் ஏனைய மதங்களுக்கும், இனங்களுக்கும் பாதிப்பு விளைவிக்க கூடாது என்று பௌத்த மதம் கூறுகிறது. முஸ்லிம்கள் ஒரு சஹானில் உணவை வைத்து அனைவரும் உண்ணுவது போல நாமும் ஒருபக்கம் பாற்சோறு உண்ணுவோம், ஒருபக்கம் தோசை உண்ணுவோம், மறுபக்கத்தில் பிரியாணி உண்ணுவோம். நாம் ஒன்று சேர்ந்து உண்ணுவோம், பயணம் செல்வோம், நாட்டை அபிவிருத்தி செய்வோம்.

இந்த நாட்டின் உரிமை பத்திரம் உள்ளது சிங்கள பௌத்தர்களாகிய எம்மிடமே. இருந்தாலும் நாம் பௌத்த தர்மத்தின் அடிப்படையில் இந்தநாட்டில் இருக்கும் எல்லா இனத்தவரையும் காப்பாற்ற நடவடிக்கை எடுப்போம். அது தவிர, நாம் எந்த இனத்தவரையோ, மதத்தவரையோ எதிர்க்கவில்லை. அவர்களுக்கு எதிராக நாம் எந்தவிதமான இன்னல்களையும் கொடுக்கவில்லை.

இவர்கள் எமக்கு பிரச்சினைகளை ஏற்படுத்தி இன்னல்களைக் கொடுப்பார்களாயின் நான் நாட்டில் உள்ள அனைத்து சிங்கள, பௌத்த மக்களிடமும் கேட்டுக்கொள்கிறேன், அன்று நாட்டைக் காக்க துட்டகைமுனு மன்னன் கைகளில் எடுத்த வாளை நீங்களும் கைகளில் எடுத்து துரத்தியடிப்பதற்கு தயங்காதீர்கள். நாம் அவ்வாறு செய்வதற்கு தயார். அவ்வாறு செய்யாமல் இருக்க எம்மால் முடியாது. என்றார்.

# ஈழத் தமிழ் அகதிகளுக்கு இரட்டைக் குடியுரிமை!

## அ.தி.மு.க. கோரிக்கை



இலங்கை தமிழர்களுக்கு இரட்டை குடியுரிமை வழங்க மத்திய அரசை வலியுறுத்துவோம் என்று தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

குடியுரிமை சட்டத் திருத்தம் குறித்து தமிழக அரசின் நிலைபாடு என்ன எனச் சேலம் விமான நிலையத்தில் வைத்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர். இதற்குப் பதில் வழங்கிய அவர் –

அம்மா மறைவிற்கு பிறகு, நான் பிரதமரை சந்தித்த போதும், அம்மா வலியுறுத்திய அந்த கோரிக்கையை பிரதமரிடத்திலேயே வலியுறுத்தி இருக்கின்றேன். கோரிக்கை மனுவும் அளிக்கப்பட்டு இருக்கின்றது.

இலங்கையில் இருந்து தமிழகத்திற்கு வந்துள்ள இலங்கை மக்களுக்கு இரட்டை குடியுரிமை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டு இருக்கின்றது. அதோடு, குடியுரிமை திருத்த சட்டம் இப்போது நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தியபோது, அ.தி.மு.க. சார்பாக பேசிய மேலவை உறுப்பினர்கள் இதைத் தெளிவுபடுத்தி இருக்கின்றார்கள்.

ஏதோ, அ.தி.மு.க. அரசு இலங்கைத் தமிழர்களுக்குத் துரோகம் விளைவித்ததாக ஒரு பொய்யான குற்றச்சாட்டை மு.க.ஸ்டாலின் சொல்லி இருக்கின்றார். இது அத்தனையும் முழு பொய்.

2009 இல் தி.மு.க. தலைவர் கருணாநிதி முதலமைச்சராக இருந்த காலம். மத்தியிலே காங்கிரஸ் தலைமையிலான அமைச்சரவையில் தி.மு.க. இடம் பெற்றிருந்தது.

அந்தக் காலகட்டத்தில் இலங்கையில் போர் நடந்து கொண்டிருந்தது. அந்தப் போரை நிறுத்த வேண்டும் என்று கருணாநிதி உண்ணாவிரதம் மேற்கொண்டார். அந்த உண்ணாவிரதத்தை ஒரு மணி நேரத்தில் முடித்துக் கொண்டார்.

அதன் பிறகு நிருபர்களிடம் இலங்கையில் போர் நிறுத்தம் செய்யப்பட்டுவிட்டது. யாரும் அச்சப்பட தேவையில்லை என்ற ஒரு பொய்யான செய்தியை அவர் வெளியிட்டார்.

இதை நம்பி இலங்கையில் வாழ்கின்ற தமிழ் மக்கள் பதுங்கு குழியில் இருந்து வெளியே வந்து நடமாடியபோது அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இலங்கையில் இருக்கின்ற இராணுவங்கள் குண்டு மழை பொழிந்து சுமார் ஒன்றரை லட்சம் தமிழர்களைக் கொன்று குவித்தார்கள்.

கருணாநிதி சொன்ன வார்த்தையை நம்பி இலங்கைத் தமிழர்கள் வெளியே வந்த காரணத்தினாலே தங்களுடைய உயிரை நீத்தார்கள். ஆகவே, வேண்டும் என்றே திட்டமிட்டு இலங்கை தமிழர்களுக்கு நன்மை செய்வது போல நாடகமாடி கொண்டிருக்கின்ற ஒரே கட்சி தி.மு.க.,

ஒன்றரை லட்சம் பேரைக் கொன்று குவித்த அந்த இலங்கை அரசை கண்டித்து போராட்டம் நடத்தினார்களா? அல்லது மத்திய அரசை வலியுறுத்தி குரல் கொடுத்தார்களா?. இவர்கள்தானே அப்போது மத்தியிலே ஆட்சி அதிகாரத்தில் அங்கம் வகித்தார்கள்.

அப்போதுதெல்லாம் மவுனம் சாதித்து விட்டு எந்த போராட்டமும் செய்யாதவர்கள் இவர்கள். ஒரே நேரத்தில் கொத்துக் கொத்தாக நம்முடைய தமிழ் மக்கள் கொன்று குவித்த காட்சி அனைத்துத் தொலைக்காட்சியிலும் காணப்பட்டது.

இதை கண்டித்து தமிழகத்தில் போராட்டம் நடத்தினார்களா? அல்லது மத்திய அரசை எதிர்த்து போராட்டம் நடத்தினார்களா? இவர்கள் பதவிதானே பெரிதாக கருதினார்கள். இவருடைய மகன் பதவியில் இருக்க வேண்டும். குடும்ப உறுப்பினர்கள் அதிகாரத்தில் இருக்க வேண்டும். இதுதான் தி.மு.க.வின் நிலைப்பாடு.

அப்போது முதலமைச்சராக இருந்த கருணாநிதி அவர்களுக்கும் இதே எண்ணம்தான். அவருடைய மகன் மு.க.ஸ்டாலினுக்கும் அதே எண்ணம்தான்.

அதுமட்டுமல்ல 13 ஆண்டு காலம் மத்தியில் ஆட்சி அதிகாரத்தில் இருந்தார்கள். அந்த 13 ஆண்டுகளில், ஏன் இலங்கை தமிழர்களுக்கு குடியுரிமை பெற்று தரவில்லை?.

நாங்கள் மத்தியில் ஆட்சி அதிகாரத்தில் இல்லை. ஆனால் தொடர்ந்து அ.தி.மு.க. இலங்கையில் இருந்து தமிழகத்திற்கு வந்துள்ள இலங்கை தமிழ் மக்களுக்கு இரட்டை குடியுரிமை வழங்க வேண்டும் என்று தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்தி வந்திருக்கிறோம். – என்றார்.

# ஐக்கிய தேசியக் கட்சிக்கு விரைவில் புதிய தலைமை

## ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பு



கொழும்பு, டிசெ. 19

ஐக்கிய தேசியக் கட்சிக்குப் புதிய தலைமையை அறிமுகப்படுத்துவதே தனது உடனடிப் பணி என்று தெரிவித்துள்ளார் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

கட்சித் தலைமையகமான சிறிகோத்தாவில் நேற்று முன்தினம் பல்கலைக்கழக மாணவர்களைச் சந்தித்து பேசியபோதே அவர் இதனை தெரிவித்தார்.

கட்சி சீர்திருத்தங்களைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக அனைத்து ஐ.தே.கவினரும் ஒரே குடையின் கீழ் வரவேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நான் எப்போதும் கட்சித் தலைவராக இருக்க முடியாது. அதனால்தான் ஒரு புதிய தலைமையை வளர்ப்பது எனது பொறுப்பாகக் கருதுகிறேன். இந்த நோக்கத்துக்காகக் கட்சியின் எதிர்கால நடவடிக்கை குறித்து முடிவெடுப்பதில் அனைத்து ஐ.தே.கவினரும் ஒன்றிணைய வேண்டும். கட்சி வலிமையாக வளரவேண்டும். தேங்கி நிற்க அனுமதிக்க முடியாது. 2020 ஜனவரியில் இருந்து பொதுத் தேர்தலுக்கான பிரசாரத்தை நாங்கள் தொடங்குவோம்.

சஜித் பிரேமதாஸ புதிய எதிர்க்கட்சித் தலைவராக தனது பொறுப்புகளை நிறைவேற்றிக் கட்சியின் நாடாளுமன்ற விவகாரங்களை முன்னெடுக்க வேண்டும்.

புதிய தலைவர்கள் உட்பட அனைவரும் கட்சியைப் புதிய உயரத்துக்கு கொண்டு செல்ல வேண்டும். நாங்கள் அதை 1970 இல் செய்தோம். வீணடிக்க நேரமில்லை என்பதால் இப்போது வேலையைத் தொடங்குவோம் – என்றார். (ஐ)

# வடக்கு மணல் கொள்ளைக்கு ராணுவம், பொலிஸ் உடந்தை!

## சிவாஜிலிங்கம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 19

தமிழர் தாயகப் பகுதிகளில் இடம்பெறும் மணற்கொள்ளைக்கு இராணுவத்தினரும் பொலிஸாரும் உடந்தையாக இருக்கின்றார்கள் என்று தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் சிவாஜிலிங்கம் குற்றம் சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், 'இந்த மணல் கொள்ளைக்கு முடிவு கட்டாவிட்டால் ஆளுநர் அலுவலகத்தை முற்றுகையிட்டுத் தொடர் போராட்டம் முன்னெடுக்கப் படும்.



மணல் எடுத்து செல்வதற்கு அனுமதிப்பத்திரம் தேவையில்லை என அரசு அறிவித்ததில் இருந்து, அரச கணிகளுக்குள் மட்டுமல்லாமல் தனியார் காணிகளுக்குள்ளும் மணல் எடுக்கப்படுகிறது.

இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் போது மக்கள் பிரதிநிதிகள் என்ன செய்து கொண்டிருக்கின்றார்கள்? மக்கள் பிரதிநிதிகள் இது தொடர்பாக அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் .

சட்டம் ஒழுங்கைச் சீர்குலைக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை அரசு நிறுத்தவேண்டும்.

இதேவேளை இந்தியாவில் இருந்து தாய்நாட்டுக்கு திரும்பும் மக்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்கப் படும் எனச் சொல்லப்பட்டாலும் கூட அவர்களது சொந்த இடங்கள் வன இலாகாவின் கட்டுப் பாட்டுக்குள் உள்ளன – என்றார். (ஐ)

# மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அலுவலகம் யாழ். செயலகத்தில்





யாழ்ப்பாணம், டிசெ. 19

யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் அதிகார சபை அலுவலகம் ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தினுள் அமைந்துள்ள கட்டடத் தொகுதியில் இந்த அலுவலகம் நேற்றுக் காலை யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட செயலாளர் நா.வேதநாயகன் , வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் அ.பத்திநாதன் உள்ளிட்ட அரச அதிகாரிகள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (ஐ–07)

# ஹென்றியரசர் கல்லூரி மாணவர்கள் தேசிய சங்கீதப் போட்டியில் முதலிடம்



யாழ்ப்பாணம், டிசெ. 19

தேசிய ரீதியில் பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற கர்நாடக சங்கீதப் போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மாணவர்கள் இருவர் முதலிடம் பெற்றுள்ளனர்.

ஆண்களுக்கான தனியிசை இளநிலைப் பிரிவுப் போட்டியில் ஜோ.கிாந்த்தும் முதுநிலைப் பிரிவில் ம.சனோஜிகன் முதலிடம் பெற்றுச் சாதித்துள்ளனர் எனக் கல்லூரிச் சமூகம் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளது. (ஐ)

# ஏ.எல். பெறுபேறுகள் கிறிஸ்மஸுக்கு பின்

கொழும்பு, டிசெ. 19

கடந்த ஓகஸ்ட மாதம் இடம்பெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் இந்த மாத இறுதியில் வெளியிடப்படும் எனப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளை இறுதி செய்யும் பணி நிறைவடைந்த நிலையில் டிசெம்பர் 25ஆம் திகதி கிறிஸ்மஸ் பண்டிகையின் பின்னர் வெளியாகும் எனப் பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

உயர்தரப் பரீட்சையில் இந்த ஆண்டு 3லட்சத்து 37 ஆயிரத்து 704 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர்.

அவர்களில், ஒரு லட்சத்து 39 ஆயிரத்து 475 பேர் பழைய பாடத்திட்டத்துக்கு அமையவும், ஒரு லட்சத்து 98 ஆயிரத்து 229 பேர் புதிய பாடத்திட்டத்துக்கு அமையவும் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். (ஐ)

northern PC PARK
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern PC Park
077 757 0124 021 567 5566
077 336 6443 021 222 9581
075 555 7327 021 222 2050
071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545

காலைக்கதிர் Kalaikathir



# சர்வதேச களத்தில் மீண்டும் வில்லியர்ஸ்!



2020 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் இடம்பெற வுள்ள உலகக் கிண்ண 'ருவென்ரி 20' தொடரில் தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வீரர் ஏபி டி வில்லியர்ஸ் பங்கேற்பார் என தென்னாபிரிக்க அணியின் தலைவர் பப் டு பிளசிஸ் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதற்கான பேச்சு தற்சமயம் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

'மிஸ்டர் 360' என அழைக்கப்படும் தென்னாபிரிக்காவின் நட்சத்திர வீரரும், முன்னாள் அணித் தலைவருமான டி வில்லியர்ஸ் 21 ஆம் நூற்றாண்டின் இணையற்ற கிரிக்கெட் வீரர்களில் ஒருவராகப் பார்க்கப்படுகின்றார்.

இவர் உச்சத்தில் இருந்த போதே 34 வயதில் சர்வதேசப் போட்டிகளில் இருந்தான ஓய்வை அறிவித்தார். ஆனாலும் தொடர்ச்சியாக கழக மட்டப் போட்டிகளில் விளையாடி வருகின்றார்.

இந்நிலையில், சரிவை எதிர்நோக்கியுள்ள தென்னாபிரிக்க அணியில் அவர் மீண்டும் இடம்பெற வேண்டும் என்ற கோரிக்கைகள் ஆங்காங்கே மேலெழுந்தன. இவ்வருட நடுப் பகுதியில் இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் இடம்பெற்ற உலகக் கிண்ணத் தொடரிலும் அவர் பங்கேற்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது.

ஆனாலும், தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை இவ்விடயத்தில் மறுப்புத் தெரிவித்தது. ஓய்வு பெற்றவர்களை மீள அணிக்கு அழைக்கும் எண்ணம் இல்லை எனக் குறிப்பிட்டிருந்தன.

இந்நிலையில் கடந்த திங்கள் இடம்பெற்ற தென்னாபிரிக்க கழகங்களுக்கு இடையிலான 'எம்.எஸ்.எல் ருவென்ரி 20' தொடரின் இறுதிப் போட்டியில் ஸ்வான் ஸ்பார்டன்ஸ் அணிக்காக விளையாடிய வில்லியர்ஸ் அரைச்சதம் குவித்து அசத்தினார். இருந்தும் அவரது அணி தோல்வியடைந்தது.

இதனையடுத்து மீண்டும் வில்லியர்ஸ் அணிக்கு மீளத்திரும்ப வேண்டும் என்ற விடயம் அதிகமாகப் பேசப்படுகிறது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள தென்னாபிரிக்க டெஸ்ட் அணியின் தலைவர் டு பிளசிஸ், வில்லியர்ஸ் ஓய்வில் இருந்து மீண்டு வருவது தொடர்பான பேச்சுகள் கடந்த சில மாதங்களாக இடம்பெறுவதை உறுதிப்படுத்தியுள்ளார்.

அதேவேளை, தென்னாபிரிக்க அணியின் புதிய தலைமைப் பயிற்சியாளர் மார்க் பௌச்சர், ருவென்ரி 20 உலகக் கிண்ணத்தில் விளையாடுமாறு டி வில்லியர்ஸிற்கு திறந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

டு பிளசிஸ் மேலும் தெரிவிக்கையில், 'மக்கள் டி வில்லியர்ஸ் மீளவும் அணிக்குத் திரும்ப வேண்டும் என்று விரும்புகிறார்கள். நானும் அதற்கு உடன்படுகின்றேன். அவரை அணிக்கு மீள அழைப்பதற்கான பேச்சு கடந்த இரண்டு – மூன்று மாதங்களாக இடம்பெறுகின்றன. 'ருவென்ரி 20' போட்டிகள் வித்தியாசமானவை. டெஸ்ட் போட்டிகள் மிக முக்கியமானவை என்றாலும், 'ருவென்ரி 202 உலகக் கிண்ணப் போட்டிகளும் அதற்கு சற்றும் குறைவில்லாதவை. எனவே, வில்லியர்ஸை அணிக்கு மீள அழைப்பதற்கான பேச்சு தொடரும்'- என்றார்.

உலகக் கிண்ணத்திற்கு முன்பதாக தென்னாபிரிக்கா அணி இங்கிலாந்து, ஆஸ்திரேலியா மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுடன் 'ருவென்ரி 20' தொடர்களில் விளையாடவுள்ளது. அதுமட்டுமல்லாது இலங்கையிலும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது. ஆனால், இவற்றில் டி வில்லியர்ஸ் விளையாட வாய்ப்பில்லை.

இருந்தும், அடுத்த வருடம் இடம்பெறும் ஐ.பி.எல். தொடரில் அவர் பங்கேற்கவுள்ளார். உலகக் கிண்ண தென்னாபிரிக்க அணிக்கு டி வில்லியர்ஸை இணைப்பதற்கு அந்த தொடரில் அவர் வெளிப்படுத்தும் பெறுபேறுகள் போதுமானவை எனக் கருதப்படுகிறது.

ஆனாலும், டி வில்லியர்ஸின் திறமை பற்றி கவலைப்படத் தேவையில்லை என்றும், அவரது அனுபவம் அணிக்கு போதுமானது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# மகளிர் கிரிக்கெட் விருது விவரங்கள் வெளியாகின



இந்த வருடத்துக்கான மகளிர் கிரிக்கெட் விருதுகளின் விவரங்களை சர்வதேச கிரிக்கெட் பேரவை வெளியிட்டுள்ளது.

2019ஆம் ஆண்டுக்கான சிறந்த கிரிக்கெட் வீராங்கனையாக ஆஸ்திரேலியாவின் எலிசி பெரி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்த ஆண்டின் சிறந்த இருபதுக்கு 20 வீராங்கனையாக ஆஸ்திரேலிய அணியின் அலிசா ஹேலி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், இந்த ஆண்டின் சிறந்த ஒருநாள் வீராங்கனையாக, ஆஸ்திரேலிய அணியைச் சேர்ந்த எலிசி பெரி தெரிவாகியுள்ளார்.

2019ஆம் ஆண்டுக்கான வளர்ந்துவரும் வீராங்கனையாக தாய்லாந்து அணியைச் சேர்ந்த சனிடா சுதிரங் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

# 2019 விளையாட்டு ஆளுமை விருது பென் ஸ்டோக்ஸுக்கு



இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் வீரர் பென் ஸ்டோக்ஸ் பிரிட்டன் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் 2019 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு ஆளுமை கொண்டவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

லோர்ட்ஸ் மைதானத்தில் நியூசிலாந்திற்கு எதிரான வியத்தகு சூப்பர் ஓவர் வெற்றியுடன் இங்கிலாந்து முதன்முறையாக உலகக் கிண்ணத்தை சுவீகரித்த போட்டியில் சகலதுறை ஆட்டக்காரரான ஸ்கோக்ஸ் ஆட்ட நாயகனாக விருது பெற்றார்.

ஹெடிங்லேயில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது ஆஸ் டெஸ்ட் வெற்றியில் 28 வயதான பென் ஸ்டோக்ஸ் ஆட்டமிழக்காமல் 135 ஓட்டங்களை எடுத்தார்.

பொது வாக்கெடுப்பில், போமியுமுலா 1 போட்டியாளர் லூயிஸ் ஹாமில்டன் இரண்டாவது இடத்தையும், ஸ்ப்ரிண்டர் டினா ஆர் – ஸ்மித் மூன்றாவது இடத்தையும் பிடித்தனர்

மென்செஸ்டர் சிட்டி மற்றும் இங்கிலாந்து உதைபந்து வீரர் ரஹீம் ஸ்டெர்லிங், உலக ஹெப்டாத்லான் சாம்பியன் கட்டரினா ஜான்சன் – தாம்சன் மற்றும் வெல்ஷ் ரக்பி யூனியன் ஜாம்பவான் அலுன் வின் ஜோன்ஸ் ஆகியோரும் பிரதான விருதுக்கு தேர்வு செய்யப்பட்டனர்.

இளவரசி ரோயல் மற்றும் முன்னாள் மான்செஸ்டர் யுனைடெட் மற்றும் ஸ்காட்லாந்து உதைபந்து வீரர் டெனிஸ் லா ஆகியோரால் ஸ்டோக்ஸ் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

2005 ஆம் ஆண்டில் எண்ட்ரூ பிளின்டோப் விளையாட்டு ஆளுமைக்கான விருதை வென்ற முதல் கிரிக்கெட் வீரர் என்ற பெருமையை பெற்றார் . நியூசிலாந்தில் பிறந்த ஸ்டோக்ஸ் இங்கிலாந்து அணிக்காக அளப்பரிய பணிகளை ஆற்றியுள்ளார். (ஐ)

# ஐ.பி.எல். ஏலம் இன்று!

2020 ஆம் ஆண்டுக்கான இந்தியன் பிரீமியர் லீக் (ஐ.பி.எல்.) கிரிக்கெட் தொடரில் பங்கேற்கவுள்ள வீரர்களுக்கான ஏலம் கொல்கத்தாவில் இன்று பிரமாண்டமாக இடம்பெறவுள்ளது.

13 ஆவது ஐ.பி.எல். 'ருவென்ரி 20' கிரிக்கெட் தொடர் அடுத்த ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் இந்தியாவில் பல்வேறு நகரங்களில் இடம்பெறவுள்ளது. இந்த போட்டிக்கான வீரர்களின் ஏலம் கொல்கத்தாவில் இன்று வியாழக்கிழமை நடக்கிறது.

ஏலப்பட்டியலில் மொத்தம் 146 வெளிநாட்டு வீரர்கள் உட்பட 332 பேர் இடம்பெற்றுள்ளனர். இதில் இருந்து 73 வீரர்கள் ஏலம் மூலம் அணிக்கு தெரிவு செய்யப்படுகிறார்கள்.

ஒவ்வொரு அணியும் அதிகபட்சமாக ரூ. 216 கோடியை ஏலத்தில் செலவிட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதில் ஏற்கனவே தக்க வைத்துள்ள வீரர்களுக்கான ஊதியத்தை கழித்து மீதமுள்ள தொகையைத் தான் ஏலத்தில் பயன்படுத்த முடியும்.

உதாரணமாகச் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் 20 வீரர்கள் தக்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான ஒட்டுமொத்த சம்பளத் தொகை ரூ. 178 கோடி போக மீதமுள்ள ரூ.37 கோடியை கொண்டு தங்களது அணிக்கு தேவையாக உள்ள எஞ்சிய 5 வீரர்களை கொள்வனவு செய்ய முடியும்.

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாடிய வீரர்களின் அடிப்படை விலை ரூ. ஒரு கோடி 27 லட்சம், ரூ. ஒரு கோடி 91 லட்சம், ரூ.2.5 கோடி, ரூ.3.8 கோடி, ரூ.5 கோடி ஆகும். இதில் ஆஸ்திரேலியாவின் பேட் கம்மின்ஸ், ஹேசில்வுட், மிட்செல் மார்ஷ், கிறிஸ் லின், மேக்ஸ்வெல், தென்னாபிரிக்காவின் ஸ்டெயின், இலங்கையின் மத்தியூஸ் ஆகிய 7 வீரர்களின் தொடக்க விலை அதிகபட்சமாக ரூ.5 கோடியாகும்.

சர்வதேசப் போட்டிகளில் ஆடாத வீரர்களுக்கு ரூ.50 லட்சம், ரூ.76 லட்சம், ரூ.100 லட்சம் என்று அடிப்படை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த ஏலப்பட்டியலில் தமிழகத்தை சேர்ந்த 11 வீரர்கள் அங்கம் வகிக்கிறார்கள். இவர்கள் அனைவரும் தமிழ்நாடு பிரீமியர் லீக் (டி.என்.பி.எல்.) கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்றவர்களாவர்.

இதில் சேப்பாக் சுப்பர் கில்லீஸ் அணிக்காக கலக்கிய வேகப்பந்து வீச்சாளர் சேலத்தை சேர்ந்த ஜி.பெரியசாமி கவனத்தை ஈர்த்துள்ளார். 26 வயதான பெரியசாமி இலங்கையின் நட்சத்திர வேகப்பந்து வீச்சாளர் லசித் மாலிங்க சாயலில் 'யோர்க்கர்' வீசுவதில் கில்லாடி.

இந்த ஆண்டு நடந்த டி.என்.பி.எல். தொடரில் 9 ஆட்டத்தில் 21 விக்கெட்டுகளைச் சாய்த்து சேப்பாக் சுப்பர் கில்லீஸ் அணியின் வெற்றிக்கு பக்கபலமாக இருந்தார். இவரது அடிப்படை விலை ரூ.50 லட்சம் ஆகும்.



இதேபோல் கடந்த முறை ரூ. 21 கோடிக்கு விலை போன சுழற்பந்து வீச்சாளர் வருண் சக்கரவர்த்தி, சாய் கிஷோர், சித்தார்த், மணிகண்டன், அருண் கார்த்திக், ஹரி நிஷாந்த், பாபா அபராஜித், முகமது, எம்.அபினவ், ஷாருக்கான் ஆகிய தமிழக வீரர்களும் இறுதிக்கட்ட ஏலப்பட்டியலில் உள்ளனர்.

இன்று பிற்பகல் 3.30 மணிக்கு தொடங்கும் ஐ.பி.எல். ஏல நிகழ்ச்சியை ஏலம் விடுவதில் பிரபலமான இங்கிலாந்தை சேர்ந்த ஹக் எட்மீட்ஸ் நடத்துகிறார்.

# மின்தடை

யாழ்ப்பாணம், டிச.19

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை **காலை08.00 மணியிலிருந்து மாலை 05.00 மணிவரை -**

**யாழ் பிரதேசத்தில் -**

வதிரி, இரும்புமதவடி, சக்களாவத்தை நவிண்டில், தேவர யாழி, மனோகரா, திக்கம் ஆகிய இடங்களிலும,

**வவுனியா பிரதேசத்தில் -**

கூமாங்குளம் கிராமம், செட்டிகுளம் நகரம், ஒட்டறங் குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப் பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# பழிவாங்கும் செயற்பாடுகளில் கோட்டா அரசு ஈடுபடக்கூடாது

## ஓமல்பே சோபித தேரர் கோரிக்கை

கொழும்பு, டிசே. 19

அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்திப் பழிவாங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடாது என்று இலங்கை அரசிடம் கோரியுள்ளார் தக்ஷிண லங்கா பிரதம சங்க நாயக்கர் வண. ஓமல்பே சோபித தேரர்.

கொழும்பில் நேற்று முன் தினம் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்திய அவர்,

கோட்டாபய, மஹிந்த, சம்பிக்க ரணவக்க, உதய கம்மன்பில ஆகியோர் ஒரே சித்தாந்தத்தைப் பகிர்ந்துகொண்ட சகோதரர்கள் என்பதால், நாட்டை அபிவிருத்தி செய்வதற்கான திட்டமிடலைச் செய்வதற்காக அவர்கள் ஒன்றுபட வேண்டும்.


சிங்கள பௌத்த இயக்கத்தின் விளைவாகவே கோட்டாபய ராஜபக்ஷ நாட்டின் ஜனாதிபதியானார்.

இத்தகைய பின்னணியில், அரசியல் பழிவாங்கல், தனிப்பட்ட விரோதம், தோல்வியடைந்த கட்சிகளை அடக்குதல் ஆகிய செயல்களில் ஈடுபடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

2005, 2010 மற்றும் 2015 ஆண்டுகளில் ஆட்சிக்கு வந்தவர்களுக்கும் இதே மாதிரியான ஆலோசனைகளைக் கூறினோம்.

எனினும், இவ்வாறு நடந்து கொண்ட முந்தைய அரசுகளின் நிலை குறித்து மீண்டும் கூறத் தேவையில்லை.

ஷிராணி பண்டாரநாயக்க மற்றும் சரத் பொன்சேகா



ஆகியோர் நடத்தப்பட்ட முறையை மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை

முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் - சட்ட அடிப்படையில் இல்லாமல் பழிவாங்கும் நோக்கங்களின் அடிப்படையில், எடுக்கப்பட்டுள்ளன.

ஏதேனும் சிக்கல் இருந்தால், நியாயமான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் - என்றார். (ஐ)

# சுவிஸ் அரசின் அறிக்கை இலங்கைக்கு அவமானம்

## பாலித ரங்கே பண்டார விசனம்



கொழும்பு, டிசெ. 19

தமது தூதரகப் பணியாளர் கடத்திச் செல்லப்பட்டார் எனக் கூறப்படும் சம்பவம் குறித்து, இலங்கை நடத்திய விசாரணையில் திருப்தி அடையவில்லை என்ற சுவிஸ் அறிக்கை, இலங்கைக்கு அவமானத்தை ஏற்படுத்தும் என்று ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அரசியல் பழிவாங்கும் சம்பவங்கள் மற்றும் இது போன்ற நிகழ்வுகளால், உள்நாட்டிலும் அனைத்துலக அளவிலும் இலங்கையர்கள் ஒரு கடினமான சூழ்நிலையை எதிர்கொள்வார்கள் என்றும் அவர் கூறினார். (ஐ)

# இலங்கை வரும் பிரஜைகளுக்கு அமெரிக்கா பயண எச்சரிக்கை!

அடுத்து வரும் விடுமுறைக் காலத்தில் இலங்கையில் 'தீவிரவாதிகள் சிறியளவிலான அல்லது எச்சரிக்கை இல்லாத தாக்குதல்களை நடத்தக் கூடும் என்று கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் எச்சரித்துள்ளது.

தனது குடிமக்களுக்கு நேற்று முன்தினம் வெளியிட்ட பயண ஆலோசனையிலேயே அமெரிக்கத் தூதரகம் இவ்வாறு கூறியுள்ளது. வரவிருக்கும் விடுமுறைக் காலத்தில், அமெரிக்கத் தூதரகம், அமெரிக்க குடிமக்களுக்கு தற்போதைய பயண ஆலோசனை நிலை 2 ஐ நினைவூட்டுகிறது.

சுற்றுலா தலங்கள், போக்குவரத்து மையங்கள், சந்தைகள், வணிக வளாகங்கள், அரச கட்டடங்கள், விடுதிகள், களியாட்ட விடுதிகள், உணவகங்கள், வழிபாட்டுத் தலங்கள், பூங்காக்கள், முக்கிய விளையாட்டு மற்றும் கலாச்சார நிகழ்வுகள், கல்வி நிறுவனங்கள், விமான நிலையங்கள், மருத்துவமனைகள் மற்றும் பிற பொதுப் பகுதிகளை இலக்கு வைத்து தீரவாதிகள் சிறிய அல்லது எச்சரிக்கையில்லாத தாக்குதல்களை நடத்தக் கூடும்.

அமெரிக்கக் குடிமக்கள் சுற்றுலாத் தலங்கள் மற்றும் நெரிசலான பொது இடங்களுக்குச் செல்லும்போது உங்கள் சுற்றுப் புறங்களைப் பற்றி எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

உள்ளூர் அதிகாரிகளின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும், உள்ளூர் ஊடகங்களைக் கண்காணிக்கவும்.

புதிய தகவல்களை பெறுவதற்கும் அவசர காலத்தில் உங்களைக் கண்டுபிடிப்பதை எளிதாக்குவதற்கும், ஸ்மார்ட் ட்ராவலர் பதிவு திட்டத்தில் (STEP) இணைந்து கொள்ளலாம்.

முகநூல் மற்றும் கீச்சகத்தில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தை பின் தொடரவும், இலங்கை தொடர்பான குற்ற மற்றும் பாதுகாப்பு அறிக்கையை மதிப்பாய்வு செய்யவும். - என்று அந்தப் பயண எச்சரிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

# சுவிஸ் தூதரகத்தின் மேலும் சில பணியாளர்கள் கைதாகக்கூடும்?

கொழும்பு, டிசெ. 19

கடத்தப்பட்டு அச்சுறுத்தப்பட்டார் எனப் பொய்யான குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட சம்பவத்துடன், சுவிஸ் தூதரகத்தில் பணியாற்றும் மேலும் பல அதிகாரிகளுக்குத் தொடர்பு இருப்பதாக குற்ற விசாரணைத் திணைக்களம் கண்டறிந்துள்ளதாகக் கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடத்தப்பட்டு அச்சுறுத்தப்பட்டார் எனப் பொய்யான குற்றச்சாட்டை முன்வைத்தார் என்று சுவிஸ் தூதரகப் பணியாளர் கானியர் பனிஸ்டர் பிரான்சிஸ், கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பொய்யான குற்றச்சாட்டை சுமத்திய விடயத்தில், சுவிஸ் தூதரகத்தில் பணியாற்றும் மேலும் பல அதிகாரிகளும் தொடர்புபட்டுள்ளனர். அவர்களில் பெண் அதிகாரிகளும் உள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண் பணியாளரின் அலைபேசிப் பதிவுகளில் இருந்தும் அவர் அளித்த வாக்குமூலத்தில் இருந்தும் இந்த நபர்களைக் குற்ற விசாரணைத் திணைக்களம் அடையாளம் கண்டுள்ளது.

அவர் கடத்தப்பட்டு அச்சுறுத்தப்பட்டார் என்ற கானியர் பிரான்சிஸின் குற்றச்சாட்டு, முற்றிலுமாக இட்டுக்கட்டப்பட்டது என்ற முடிவுக்கு வந்திருப்பதாக குற்ற விசாரணைத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)



# நாட்டின் இறைமையை சுவிஸ் மதிக்கவேண்டும்

## இலங்கை அரசு கோரிக்கை



கொழும்பு, டிசெ. 19

சிறிலங்காவின் சட்டம் மற்றும் இறையாண்மையை மதிக்குமாறு சுவிஸ் அதிகாரிகளிடம் இலங்கை அரசு வலியுறுத்தியுள்ளது.

கடத்தப்பட்டு அச்சுறுத்தப்பட்டார் எனப் பொய்யான முறைப்பாட்டைச் செய்தார் என்ற குற்றச்சாட்டில், சுவிஸ் தூதரகப் பணியாளர் கைது செய்யப்பட்ட சம்பவம் குறித்து, கவலை வெளியிட்டும், சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள் உரிய நடைமுறைகளைப் பின்பற்றுமாறும் சுவிஸ் வெளிவிவகார திணைக்களம் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள இலங்கை அமைச்சரவைப் பேச்சாளர் ரமேஷ் பத்திரன –

இலங்கை அரசு இந்த விசாரணையில் இருந்து விலகிச் சட்டத்தை அதன் பாதையில் செல்ல அனுமதித்துள்ளது.

தூதரகப் பணியாளர் குற்ற விசாணைத் திணைக்களத்திடம் முரண்பட்ட அறிக்கைகளை வெளியிட்டுள்ளார். எனவே விசாரணையைத் தொடர அனுமதிப்போம்.

அனைத்து நாடுகளும் இலங்கையை ஓர் இறையாண்மை கொண்ட நாடாக மதிக்கவேண்டும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கொழும்பில் உள்ள சுவிஸ் தூதுவருடன் கலந்துரையாடியபோது, தூதரகப் பணியாளரைக் கடத்தியதாகக் கூறப்படுவது அரசின் விம்பத்தை கெடுப்பதற்காக இட்டுக்கட்டப்பட்ட கதை என்று விளக்கியிருந்தார்.

பொய்யான குற்றச்சாட்டுகள் இருந்தபோதிலும் சுவிற்ஸர்லாந்துக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் எந்த வகையிலும் பாதிக்கப்படாது. – என்றார்.(ஐ)

## பாதுகாப்புச் செயலருடன் அமெரிக்கத் தூதர் பேச்சு



கொழும்பு, டிசெ. 19

பாதுகாப்புச் செயலர் மேஜர் ஜெனரல் கமால் குணரத்னவை, அமெரிக்கத் தூதுவர் அலய்னா ரெப்லிட்ஸ் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். பாதுகாப்பு அமைச்சில் நேற்றுமுன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பு இயல்பான சூழலில் இடம்பெற்றதாக பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது.

இலங்கையின் புதிய அரசால் பாதுகாப்புச் செயலராக மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன நியமிக்கப்பட்ட பின்னர், அமெரிக்க உயர்மட்டப் பிரதிநிதி ஒருவர் அவரைச் சந்தித்திருப்பது இதுவே முதல்முறையாகும்.

எனினும் இந்தச் சந்திப்புத் தொடர்பாக அமெரிக்கத் தூதுரகம் இதுவரை எந்தத் தகவலையும் வெளியிடவில்லை. (ஐ)

## கட்டுவன் ஐயப்பன் கோவில் கொடி





சபரிமலை போலவே யாழ்ப்பாணத்தில் முதன் முதல் கட்டப்பட்ட கட்டுவன் கரண்டக் குளம் ஸ்ரீ ஐயப்பன் கோவிலின் வருடாந்த மகோற்சவம் இன்று வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் ஸ்ரீ ஹரிஹர புத்திரின் அவதார நட்சத்திரமான மார்கழி உத்திர நன்னாளில் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து பத்து நாள்கள் திருவிழா நடைபெறும். ஐயப்ப பக்தர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளது.

## சுவிஸ் அதிகாரி கடத்தப்பட்ட குற்றச்சாட்டு ஏகாதிபத்தியவாதிகளின் சதி வேலைதான்!

### வடமத்திய மாகாண ஆளுநரின் அரசியல் கருத்து வெளிப்பாடு



சுவிட்ஸர்லாந்து தூதரக பணிப்பெண் கடத்தல் குற்றச்சாட்டு அரசாங்கத்துக்கு எதிரான சதித் திட்டம் என்று என லங்கா சம சமாஜ கட்சியின் தலைவரும் வடமத்திய மாகாண ஆளுநருமான திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

சுவிட்சர்லாந்து தூதரகத்தில் பணியாற்றிவந்த பெண்ணை கடத்திச்சென்று துன்புறுத்தினர் எனத் தெரிவிக்கப்பட்டுவந்த செய்தி முற்றாகப் பொய்யான சம்பவம் என தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பெரும்பான்மைச் சிங்கள மக்கள் சிறுபான்மை மக்களுக்கு எதிராகச் செயற்படுகின்றனர் என சர்வதேசத்துக்கு காட்டுவதற்கான முயற்சியாகவே இது அமைந்துள்ளது. சுவிட்சர்லாந்துத் தூதரகத்தில் பணியாற்றிய பெண் சிறுபான்மை இனத்தவராவார்.

கடந்த காலங்களில் நாட்டை சூறையாடி வந்த ஏகாதிபத்திய நாடுகளுக்கு தேவையான முறையில் கடந்த காலங்களில் செயற்பட்டுவந்தவர்கள் தொடர்ந்தும் அவர்களின் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர். அவர்களின் சதித்திட்டம் இன்னும் முடிவடையவில்லை. இவ்வாறான சம்பவங்களை உருவாக்கி எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெற இருக்கும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணைக்குழுவில் எமக்கெதிராக நடவடிக்கை எடுக்கவே திட்டமிடுகின்றனர்.

அத்துடன் மார்ச் மாதம் இடம்பெற இருக்கும் மனித உரிமை பேரவை கூட்டத் தொடரில் இலங்கையின் அனுசரணையுடன் 2015இல் அமெரிக்கா கொண்டுவந்த பொறுப்புக்கூறல் தொடர்பான பிரேரணையை மீண்டும் கொண்டுவரப் போவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதனை எடுத்துக்கொள்ளக்கூடாது என அரசாங்கம் தெரிவித்திருக்கின்றது. என்றாலும் எந்தளவுக்கு அது ஏற்றுக்கொள்ளப்படும் என தெரிவிக்க முடியாது.

அதனால் ஆட்சிக்கு வந்திருக்கும் அரசாங்கம் ஏகாதிபத்திய வாதிகளுக்கு தேவையான முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல், அதற்கு எதிராக செயற்பட்டு வருகின்றது. அதனால் எமக்கெதிரான பொய் குற்றச்சாட்டுக்களை உருவாக்கி சிங்கள பெரும்பான்மை மக்கள் இலங்கையில் சிறுபான்மை மக்களுக்கு எதிராக செயற்படுகின்றனர் என சர்வதேசத்துக்கு எடுத்துக்காட்ட சதித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எதிர்காலத்திலும் இவ்வாறான சதித்திட்டங்கள் பல்வேறு கோணத்தில் வரலாம். அதற்கு முகம்கொடுக்க நாங்கள் தயாராக வேண்டும். இதுதொடர்பாக மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் – என்றார்.

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை
No.303, K.K.S. Road, Jaffna. Srilanka.Tel: 021 222 2670/5392 Fax: 021 222 3214
Email: srimurugan09@gmail.com srimurugan303@gmail.com

# மைத்திரி, ரணில், கருவிடமும் வாக்குமூலங்கள் பெறப்படுமாம்

கொழும்பு,டிசெ.19

கடந்த ஏப்ரல் 21 பயங்கரவாதத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைக்காக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜயசூரிய உட்பட 11 முக்கிய நபர்களிடம் வாக்கு மூலம் பெற சட்ட மா அதிபர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு அறிவித்துள்ளார் எனத்தெரிவிக்கப்படுகின்றது.

பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 'பொலிஸ் மா அதிபர் மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோருக்கு எதிரான' வழக்கு விசாரணையின் போது கொழும்பு மேலதிக நீதிவான் பிரியந்த லியனகே முன்னிலையில் இத்தகவலை வெளியிட்டார்.

# நீர்கொழும்புச் சிறைக்கு நேரில் சென்று ஐ.தே.க. பிரமுகர்களுடன் ரணில் பேச்சு

கொழும்பு,டிசெ.19

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் காலை நீர்கொழும்பு சிறைச்சாலைக்கு திடீர் விஜயம் மேற்கொண்டார்.

இதன் போது நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நீர்கொழும்பு, சிலாபம் கட்சி அமைப்பாளர்களை சந்தித்து அவர் கலந்துரையாடியுள்ளார்.

நீர்கொழும்பு சிறைச்சாலையில் பல மாத காலமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் நீர்கொழும்பு முன்னாள் அமைப்பாளர் றொயிஸ் விஜித்த பெர்னாண்டோ, ஐக்கிய தேசியக் கட்சியின் சிலாபம் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த அபேசேகர ஆகியோரை சந்தித்து சுகநலம் விசாரிப்பதற்காகவே ரணில் விக்கிரமசிங்க சிறைச்சாலைக்குச் சென்றார் எனச் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சிறைச்சாலைக்கு விஜயம் செய்த ரணில் விக்கிரமசிங்கவிடம் கருத்து கேட்பதற்காக சிறைச்சாலை வாயிலில் ஊடகவியலாளர்கள் காத்து நின்ற போதிலும் அவர் கருத்து தெரிவிக்க மறுத்து அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.

# டாக்டர் ஷாபிக்கு எதிராக மீண்டும் ஆரம்பத்திலிருந்து விசாரணையாம்!

குருநாகல் போதனா வைத்தியசாலையின் வைத்தியர் ஷாபி சிஹாப்தீனுக்கு எதிரான விசாரணைகள் திரும்பவும் ஆரம்பம் முதல் முன்னெடுக்கப்படவிருக்கின்றனவாம். இதற்காகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசேட குழுவொன்று நேற்றுமுன்தினம் குருநாகல் போதனா வைத்தியசாலைக்குச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தின் உதவிப் பொலிஸ் அதிகாரியின் தலைமையிலான குழு, குருநாகல் வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் சரத் வீர பண்டார, பிரதிப் பணிப்பாளர் சந்தன கந்தன்கமுவ ஆகியோரைச் சந்தித்து இந்த விசாரணைகள் தொடர்பில் தகவல்களைப் பெற்றுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

அத்துடன், வைத்தியர் ஷாபியினால் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்ட சிங்கள தாய்மார்களிடம் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் மீண்டும் வாக்குமூலங்களைப் பெற்றுக்கொள்ளவுள்ளனர் எனவும் வைத்தியர் ஷாபியின் சொத்துக்கள் குறித்தும் விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன எனவும் குறிப்பிடப்படுகின்றது.

விண்ணப்பதாரிகள் கட்டணங்களை தவணை முறையில் செலுத்த முடியும்.

எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத்தொழில்நுட்ப வகுப்புக்களும் நடைபெறும்.

எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.

எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப்பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும். விரைவில் எழுத்துப்பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத்தரப்படும்.

THE SASIKA LEARNERS

முறைமையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.



வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும். (கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியினை மேற்கொள்ளலாம்)

சசிகா லேணர்ஸ்

அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

DS NO - 882

தலைமைக் காரியாலயம்.
இல.57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
HOTLINE: 077 722 6247
0212217678,
0776140361
sasika Learners
sasika driving Schoolgmail.com.

கிளை நிறுவனங்கள்:

வேலணை
வங்களாவடிச் சந்தி,
வேலணை
0212215472
0703013012

காரைநகர்
021 225 2454,
070 510 2484

கே.கே.எஸ். வீதி,
மல்லாகம்
021224 3393
0703013014

பண்டத்தரிப்பு
021 225 2333,
071 255 4135

சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021225 1664
0703013016

யாழ்ப்பாணம் (Town)
இல.281 C, மணிக்கூட்டு
கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(போதனா வைத்தியசாலை பின்புறமாக)
0212215472
0703013012

பருத்தித்துறை வீதி,
நெல்லியடி
021 226 0999
071 775 0999

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.12.2019 இல் வெளியிடப்பெற்றது.